# பௌத்த மதமும் தொல்லியல் மரபுரிமைகளும் : யாழ்ப்பாணக் குடாநாட்டினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

சிவரூபி சயிதரன்


## ஆய்வுச் சுருக்கம்

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தொன்மையை வெளிப்படுத்துவதில் தொல்லியல் சின்னங்களுக்கு முக்கிய பங்குண்டு. இங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் சின்னங்களில் பௌத்த மதம் சார்ந்த எச்சங்களும் உள்ளடங்கும். இலங்கையின் பல்லினப் பண்பாடானது சமயப்பண்பாட்டு அடிப்படையில் இந்து, பௌத்தம், இஸ்லாமியம், கிறிஸ்தவம் எனப் பார்க்கப்பட்டாலும், காலத்திற்குக் காலம் வெளியிடப்பட்ட ஆய்வுகளில் பௌத்த மத எச்சங்கள் ஓர் இனத்துக்குரியனவாகவே நோக்கப்பட்டு வருகின்றன. இலங்கையில் சிங்கள மக்கள் பௌத்த மதத்தினைச் சார்ந்தவர்களாகவும், தமிழ் மக்கள் இந்து சமயத்தினைச் சார்ந்தவர்களாகவும் தற்போது நோக்கப்படுகின்றார்கள். எனினும், இந்நிலையே வரலாற்றின் ஆரம்ப காலத்திலிருந்து நிலவியது எனக் கொள்வது பொருத்தமற்றதாகும். குறிப்பாக, வடஇலங்கையில் பௌத்த மத எச்சங்கள் கிடைக்கப்பெறும் போது அவை ஓர் இனம் வாழ்ந்து, விலகியதற்கான ஆதாரங்களாகவே காலத்திற்குக் காலம் நோக்கப்படுகின்றன. இவ்வாறான போக்கிற்குத் தொல்லியல் ஆய்வுகளில் சமகால அரசியல் சூழ்நிலைகள் ஏற்படுத்திய தாக்கங்களும் ஒரு காரணமாக அமைந்திருந்தன. இந்தவகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைக்கப்பெற்று வரும் பௌத்தமத மரபுரிமைச் சின்னங்களை ஓர் இனச்சார்பாகப் பார்ப்பது எந்தளவிற்குப் பொருத்தமானது?, யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றில் பௌத்தமத மரபுரிமைச் சின்னங்களின் வகிபாகம் எத்தகையது? மற்றும் யாழ். குடாநாட்டில் கிடைக்கப்பெற்ற பௌத்த மத மரபுரிமைச் சின்னங்கள் முறையாகப் பாதுகாக்கப்படுகின்றனவா? போன்ற ஆய்வு வினாக்களினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு அமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிடைக்கப்பெற்ற பௌத்த மத தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களின் வரலாற்று பின்னணியினை வெளிப்படுத்துதல் மற்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பௌத்த மத தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் பற்றிய காழ்ப்புணர்வற்ற விழிப்புணர்வை உருவாக்குதல் என்பனவே இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன. இந்த ஆய்வுக்குரிய தரவுகள் இலங்கையில் பௌத்தமதம் பற்றிக் குறிப்பிடும் மூலநூல்களிலிருந்தும், இரண்டாம்நிலை நூல்களிலிருந்தும், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகளின் அறிக்கைகள் என்பவற்றினூடாகவும் பெறப்பட்டன. இத்தரவுகளினை, இவ்ஆய்விக்குரிய முதன்நிலைத் தரவுகளான களஆய்வுத் தரவுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதாகவே இவ்வாய்வு அமைகின்றது. இதனூடாக யாழ்ப்பாணக் குடாநாட்டின் பௌத்தமத தொல்லியல் மரபுரிமைகள் ஆவணப்படுத்தப்படுவதுடன், ஆதிகால இடைக்கால இலங்கை வரலாற்றில் பௌத்த மதம் ஓர் இனத்துக்குரிய மதமாக அல்லாது அனைவரிடையேயும் செல்வாக்குச் செலுத்தியிருந்ததென்பதனை கண்டுகொள்ள முடிகின்றது.


**திறவுச் சொற்கள் :** பௌத்த மதம், மரபுரிமைகள், யாழ்ப்பாணக் குடாநாடு, தமிழர், இலங்கை

**ஆய்வு அறிமுகமும் பின்னணியும்**

இலங்கையில் பௌத்த மத எச்சங்கள் காலத்திற்குக் காலம் ஒர் இனத்துக்குரியதா கவே நோக்கப்பட்டு வருகின்றது. இங்கு சிங்கள மக்கள் பௌத்த மதத்தினைச் சார்ந்தவர்களாகவும், தமிழ் மக்கள் இந்து சமயத்தினைச் சார்ந்தவர்களாகவும் தற்போதைய நிலையில் நோக்கப்படுகின் றார்கள். எனினும் இந் நிலையே வரலாற் றின் ஆரம்ப காலத்திலிருந்து நிலவியது என்பது பொருத்தமற்றதாகும். இலங்கை யின் தொல்லியல் ஆய்வுகள் வரலாற்று தொடக்க காலத்திலிருந்து பல்லினப் பண் பாட்டம்சங்கள் இங்கு சிறப்பு பெற்றதனை எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக இங்கு பௌத்த மத எச்சங்கள் கிடைக்கப்பெறும் போது அவை ஒரு இனம் வாழ்ந்து விலகிய தற்கான ஆதாரங்களாக காலத்திற்கு காலம் நோக் கப்படுகின்றது. இவ்வாறான போக்கிற் குத் தொல்லியல் ஆய்வுகளில் சமகால அரசியல் சூழ்நிலைகள் ஏற்படுத்திய தாக்கங் களும் ஒரு காரணமாக அமைந்திருந்தன. இக்கூற்றின் பொருத்தப்பாடு பற்றி ஆராயும் போது கீழ்வரும் அறிஞர்களுடைய கருத்தி னை சுட்டிக்காட்டுவது பொருத்தமான தாகும்.

கா. இந்திரபாலாவினுடைய கருத்தானது, "முற்காலத்தில் நிலவிய முழுநிலையையும் தொல்லியல் சான்றுகளின் துணையுடன் காட்ட முயல்வதற்குப் பதிலாகக் குறிப்பிட்ட ஓர் இனக்குழுவுக்குச் சார்பான சான்றுகளை மட்டும் காணமுயல்வது தொல்லியலா ளரை ஓர் அபாயப் பொறியினுள் அகப்பட வைக்கும் முயற்சியாய் அமைந்துவிடும். அப்பொறியிலிருந்து பின்னர் வெளியேறு வது கடினம். இத்தகைய முயற்சியைக் கைவிடமுடியாது. தொல்லியலாளர் செயற் பட்டு, சில சான்றுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் போது, அரசியல்வாதிகள் அவற்றை அபகரித்துத் தங்கள் அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவர். இது இந்தியா மற்றும் யப்பான் போன்ற நாடுகளில் நடக்கும் சில தொல்லியல் ஆய்வுகள் தொடர் பாகத் தெரிவிக்கப்பட்ட ஒரு கருத்தாகும். இது இலங்கையில் நடைபெறும் சில ஆய்வுக ளைப் பொறுத்தும் கூறக்கூடியது." (இந்திரபாலா, 2006 : 50).

கலாநிதி ரொபின் கான்னிங்காம் கூறும் பொழுது, "இலங்கை வரலாற்றின் மொழி சார் அடித்தளமாக அமைவது இந்து ஆரிய மொழி என்று கூறுவோரும் ஆதித்திராவிட மொழி என்று கூறுவோரும் (தெரணியகல, 1992:743, இரகுபதி,1987:202) கருத்திற் கொள்ளத்தவறுவது என்னவெனில் மொழி மாற்றங்கள் மக்கள் மாற்றங்கள் இல்லாது நடைபெறலாம் என்பது." (Coningham, 2000 : 710).

இங்கு கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் யாதெனில், மொழிமாற்றங்கள் மக்கள் மாற்றங்கள் இல்லாது நடைபெறு மானால் காலத்திற்கு காலம் ஏற்பட்ட மதமாற்றங்களும், அவற்றின் செல்வாக்கு களும் கூட மக்கள் மாற்றங்கள் இல்லாது இடம்பெற்றிருக்கலாம் என்பதேயாகும்.

**பௌத்ததிற்கு முற்பட்ட வரலாறு**

இலங்கையில் தமிழ், சிங்கள என்ற மொழி அடிப்படையிலான இனங்கள் தோன்றுவதற்கு முன்னர் உள்ள வரலாற்று முற்பட்டகால மக்கள் அனைவரும் ஒர் இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதனை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (இந்திரபாலா, 2006:86). கி.மு 3ஆம் நூற்றாண்டில் இலங்கைக்குப் பௌத்தமதம் அறிமுகமா வதற்கு முன்னரே இடைக்கற் காலத்தினை

அடுத்து பெருங்கற்கால வாழ்வியலுடன் பொதுவானதொரு பண்பாடு இங்கு தோற்றம் பெற்றிருந்தது. பௌத்த மதத்தின் அறிமுகமானது பெருங்கற்காலப் பண்பாட்டைத் தொடர்ந்து வந்த இலங்கையின் பண்பாட்டு வரலாற்றில் ஏற்பட்ட இன்னொரு புதிய பண்பாட்டின் தொடக்க காலமாக நோக்கப்படுகின்றது. பௌத்தமதம் கி.மு 3ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து மௌரியப் பேரரசன் அசோகனது ஆட்சியில் பாடலிபுரத்தில் நிகழ்ந்த மூன்றாவது பௌத்த மாநாட்டின் பிரகாரம் உத்தியோக பூர்வமாக இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இவ்வாறு பௌத்தம் இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பொழுது இங்கு ஏற்கனவே நிலைபெற்றிருந்த பெருங்கற்கால பண்பாட்டு நிறுவனங்கள் குறிப்பாக பெருங்கற்கால பொருளாதாரக் கட்டமைப்பும், சமூக பிரிவுகளும் பௌத்த மதம் குறுகிய காலத்தில் பரவுவதற்கும், வளர்வதற்கும் வழிவகுத்தது (புஸ்பரட்ணம், 2011: 12). இம்மதத்தைப் பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த மக்களில் பெரும்பான்மையோர் பின்பற்றியிருக்கலாம் என்பதனை அப் பண்பாட்டு மையங்களை அண்மித்துக் காணப்படும் பௌத்த மதத்துடன் தொடர்புடைய பிராமிக் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின்றன. இலங்கைப் பாளி இலக்கியங்கள் குறிப்பிடும் தொடக்ககால பௌத்த ஆலயங்கள் கூடப் பெரும்பாலும் இப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களை ஒட்டியதாகவே காணப்படுகின்றன.

வரலாற்றுக்கு முற்பட்டகால மத நம்பிக்கைகள் பற்றி ஆராயும் பொழுது, இந்து சமயம் சார்ந்த பண்பாட்டு அம்சங்கள் பெருங்கற்காலம் தொட்டு அடையாளப் படுத்தப்பட்டிருந்தாலும், ஈழத்தின் இந்து சமயத்தின் தொன்மையினை இடைக்கற்காலந்தொட்டு ஆராயும் பண்பும் காணப்படுகின்றது. இந்தியாவைப் போன்று ஈழத்தின் தொன்மையான வழிபாட்டு நெறியாகிய யக்ஷ, நாக வழிபாடியற்றியவர்கள் இடைக்கற்கால மக்களாகிய ஒஸ்ரலோயிட் இன மக்களே என்பதனை அண்மைக்காலங்களில் இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கிடைக்கப்பெற்ற கற்காலக் கருவிகளும், சவ அடக்கங்களும் உறுதிப்படுத்துகின்றன. இவர்களின் சந்ததியினரே தற்கால வேடர் என்பதனையும் எடுத்துக் காட்டியுள்ளன. இவர்கள் இந்தியாவிலிருந்து ஈழத்திற்கு வந்த பின்னரும் இந்தியாவோடு குறிப்பாகத் தமிழகத்தோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்ததால் தமிழகத்திலிருந்து ஈழத்தை நோக்கிய கலாசாரப் பரிமாற்றத்திற்கு வழிவகுத்தது (சிற்றம்பலம், 1996 : 35). இக்கலாசாரப் பரவலில் ஈழத்தின் நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்ட பெருங்கற்கால பண்பாட்டுப் பரவல் முக்கியம் வாய்ந்ததாகும். இலங்கையின் பல பாகங்களிலும் பரவலாக இனங்காணப்பட்ட பெருங்கற்கால பண்பாட்டு வழிவந்தவர்களே தற்காலச் சிங்கள, தமிழ் மொழிகளைப் பேசுவோராவர்.

இலங்கைத் தமிழர் வாழ்வியலுடன் தற்போது வரை இணைந்திருக்கும் நாக மரபானது இப்பெருங்கற்காலப் பண்பாட்டு உருவாக்கத்துடன் தோன்றியிருந்ததனை தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இதன் பின்னனியிலேயே கௌதம புத்தர் இலங்கைக்கு வந்தபோது இலங்கையில் இயக்கர், நாகர் ஆகிய இரு பிரிவினர் இருந்தனர் எனவும், புத்தரின் இரண்டாவது வருகையின் போது வட இலங்கையில் வாழ்ந்த நாகர்களை வென்று அவர்களை பௌத்த சமயத்திற்கு மாற்றினர் என்ற புராணக்கதை மகாவம்ச நூலில் படைக்கப்பட்டிருந்தமையினையும் காணமுடிகின் றது.

எனினும் விஜயன் குழுவினரையே இலங்கையின் நாகரிகம் படைத்த முதற் குடிகளாக எடுத்துக்காட்டுவதன் பின்னணியில் இயக்கர், நாகர் ஆகிய இரு பிரிவினரையும் பிசாசுகள், பாம்பு மனிதர்களாகக் கூறி மனித இனமற்றவர்களாகவே மகாவம்ச வரலாற்றுக் கதையில் கூறப்பட்டிருந்தது. எனினும் சத்தமங்கல கருணாரட்ன, ராஜ் சோமதேவா போன்ற அறிஞர்கள் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களை ஆதார மாகக் காட்டி இயக்கரையும், நாகரையும் இலங்கையில் வாழ்ந்த தொடக்ககால இனக் குழுக்கள் என அடையாளப்படுத்தியிருந்தனர் (Karunaratne, 1984 : 54). கா. இந்திரபாலா பௌத்த மொழியான பிராகிருத மொழியை ஏற்றுக் கொண்ட மக்கள் அம்மொழி சார்ந்த இனக்குழுவாக உருவாகிக்கொண்டிருந்த போது நாகர் இன மக்கள் தமிழ்மொழி பேசும் இனக்குழுவாக உருவாகி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழத்தொடங்கி னர் எனக் கூறுகிறார். பௌத்தம் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் இங்கிருந்த மக்களி டையே நாகவழி பாட்டம்சங்கள் சிறப்புற்றி ருந்ததனையும் அண்மைக்காலம் வரையான தொல்லியல் ஆய்வுகள் உறுதிப்படுத்தி நிற்கின்றன. பிற்காலத்தில் நாகவழிபாட்டம் சங்கள் இந்து, பௌத்த மத அம்சங்களுடன் இணைந்ததனையும் காணமுடிகின்றது.

இலங்கையில் பௌத்தம் பரவுவதற்கு பல நூற்றாண்டுக்கு முன்னரே இந்து சமய வழிபாட்டு அம்சங்கள் செல்வாக்கு பெற்றி ருந்ததனை பாளி இலக்கியங்கள், மற்றும் தொல்லியல் சான்றுகள் என்பன உறுதிப்ப டுத்துகின்றன. இந்நிலையில் இன்றைய சிங்கள மொழியைப் பேசுவோரின் மூதாதை யினரும், அவர்களின் சந்ததியினரும் பௌத்தத்திற்கு மதம் மாறினாலும் கூடத் தொடர்ந்து இந்துசமய வழிபாட்டு நெறிகளையும் பின்பற்றினர் என்பதனை இன்றும் நாட்டார் வழிபாடாகச் சிங்கள மக்கள் மத்தியில் காணப்படும் இந்து சமய வழிபாட்டு நெறிகள் எடுத்துக்காட்டுகின் றன. இதனை பௌத்த குருமார்கள் அல்லாதோரால் எழுதப்பட்ட சந்தேஸய இலக்கியங்களும் உறுதிப்படுத்துகின்றன. உதாரணமாக கண்டி அரசுடன் இணைந்த பௌத்த சமயமரபில் பத்தினித் தெய்வம் பௌத்த சமயத்தையும், அரசையும் காவல் செய்கின்ற காவல் தெய்வமாக விளங்குவத னையும், விஸ்ணு, நாத, ஸ்கந்த (கத்தறகம) ஆகிய கடவுளர்கள் காவல் தெய்வங்களாக அரச சடங்குகளின் போது முக்கியப்படுத்து வதையும் காணலாம். மேலும் மகாவம்ச வரலாற்றுக் கதையின்படி புத்தபெருமான் நிர்வாணம் அடைவதற்கு முன்னர் தேவர்க ளின் தலைவரான 'சாக்க' என்னும் தெய்வத்தை அழைத்து இலங்கையில் வந்திறங்கும் விஜயனிற்கும் அவன் தோழர்க ளிற்கும் பாதுகாப்பு வழங்கும்படி பணித் தார். அப்பணியை சாக்க 'உப்பலவன்ச' என்ற தெய்வத்திடம் ஒப்படைத்தார். இங்கு குறிப்பிடப்படும் உப்பலவன்ச எனும் தெய்வமே விஸ்ணு ஆகும். (நீலோற்பல மலரின் நிறத்தை உடையவன் என்பது உப்பலவன்ச என்பதன் பொருளாகும்) (சிற்றம்பலம், 1996 : 30).

எனினும் இலங்கையின் இந்து சமய வழிபாட்டு அம்சங்கள் புராதன காலம் தொட்டு அடையாளப்படுத்தப்பட்டாலும் ஆரம்ப கால கலைப்படைப்புக்கள், வழி பாட்டு இடங்கள் எனும் போது பௌத்த சமயம் சார்ந்ததாகவே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் அழியாத பொருட்க ளைக் கொண்டு கட்டிடங்கள், சிற்பங்கள் அமைக்கும் மரபு பௌத்தத்திற் காணப் பட்டது போன்று இந்து சமயத்தில் பெருமள வில் காணப்படவில்லை. இந்துசமய

வரலாற்றில் வட இந்தியாவில் குப்த வம்சத்தவரது காலமும், தென்னிந்தியாவில் பல்லவரது எழுச்சியுமே நிலையான பொருட் களைக் கொண்டு சிற்பங்கள், வழிபாட்டி டங்கள் அமைக்கும் மரபிற்கு வழிவகுத்தது எனலாம்.

**பௌத்தமத வரலாறு**

இன்று தமிழர்களும் இந்துமதமும் சிறப்பு பெற்று விளங்கும் இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் புராதன காலத்தில் பௌத்த மதம் நிலைபெற்ற செய்தியினை மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி இலக்கியங்கள் உறுதிப்படுத் துகின்றன. கௌதம புத்தர் தனது மதத்தைப் பரப்ப மூன்று தடவைகள் இலங்கைக்கு வந்திருந் தார் என்பதனை மகாவம்ச நூலின் முதற் பகுதி விரிவாக எடுத்துரைக்கின்றது. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்த போது நாகதீபத்தில் (வட இலங்கை யில்) இரு நாக மன்னர்களிடையே ஏற்பட்ட சிம்மாசனப் போராட்டத்தை தீர்த்து வைத்த தாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது (மகா வம்சம் 8:54). தேவநம்பியதீஸன் தனது ஆட்சிக்காலத்தில் ஜம்புகோளபட்டினத்தில் கௌதம புத்தரின் காலடிபட்ட இடங்களை கேட்டறிந்து கொண்டு அந்த இடங்களில் திஸமாரகம விகாரை, பஞ்சினராமா விகாரை கட்டியதாக மகாவம்சம் மேலும் கூறுகின்றது. ஜம்புகோளத்தில் இருந்த விகாரை பின்னர் கனிட்ட தீஸன் (கி.பி 167 - 186), வொகரிக தீஸன் (209 - 211), முதலாம் விஜயபாகு போன்ற மன்னர்களது ஆட்சி யில் புதுப்பித் துக் கட்டப்பட்ட செய்திகளும் காணப்படுகின் றன. கி.மு 3 ஆம் நூற்றாண்டில் பௌத்தமத புனித சின்னமான வெள்ளரசுக்கிளையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள ஜம்புகோளப் பட்டினத்தில் வந்திறங்கிய சங்கமித்தை அங்கிருந்தே அநுராதபுரத்திற்குச் சென்ற தாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது (மகா வம்சம் 11: 23, 28. 19: 23-26. 60: 20- 23). சூளவம் சத்தில் வௌகரிகதிஸ்ஸ மன்னன் யாழ்ப்பாணத்தில் உள்ள திஸ்ஸவிகாரை யைச் சுற்றி மதில் அமைத்த செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது (சூளவம்சம் 42:62). 4ஆம் அக்ரபோதி மன்னனுடைய ஆட்சிக் காலத்தில் பொத்தசாத்தன், மகாசாத்தன் ஆகிய இருவர் மன்னனின் முக்கிய அமைச்சர்களாக இருந்து பௌத்தமதத் திருப்பணிகளைச் செய்துள்ளனர் என சூளவம்சம் குறிப்பிடு கின்றது (சூளவம்சம், 84:7-16). 1ஆம் உதயன் (கி.பி 792 - 797) மனைவி ஜனசேனபத எனும் விகாரையைக் கட்டித் தமிழ் பிக்குமாருக்கு வழங்கினாள் எனச் சூளவம்சம் குறிப்பிடு கின்றது (சூளவம்சம் 46-21-24). தமிழ் பௌத்த காப்பியமான மணிமேகலையில் அறவண வடிகள், மணிமேகலை முதலானோர் இலங்கையில் நாகநாடு, மணிபல்லவம், இரத்தினதீவம் முதலான இடங்களுக்குச் சென்று அங்குள்ள புத்த பாத பீடிகையைத் தரிசித்ததாகக் குறிப்பிடுகின்றது (மணிமேகலை, 8: 1 - 2, 43 - 63). அவற்றுள் நாகநாடு, மணி பல்லவம் ஆகிய இடங்கள் முறையே யாழ்ப்பாணத்தையும், இரத்தினதீவம் சிவனொளிபாத மலையையும் குறிப்ப தாகும்.

இலங்கையில் பௌத்தமதம் அறிமுகமா வதற்குத் தொடக்க காலத்தில் ஏற்பட்ட வட இந்திய அரசியல் தொடர்பே ஒரு காரண மாக இருந்தாலும், பௌத்தத்தின் வளர்ச் சிக்கு தமிழக, ஆந்திர தொடர்புகளே முக்கிய காரணமாக இருந்துள்ளன. கிறிஸ்துவிற்கு முற்பட்ட நூற்றாண்டுகளி லேயே தமிழகத்தில் பௌத்த, சமண மதங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் கிறிஸ்துவிற்கு பின் மூன்றாம் நூற்றாண்டின் பின்னரே காவிரிப்பூம்பட்டினம், காஞ்சி,

மதுரை, உறையூர் போன்ற மையங்களில் இச்சமயங்கள் செல்வாக்கு செலுத்தியிருந்தன. இக்காலப் பகுதியில் தமிழ்நாட்டு அறிஞர்கள் பௌத்த மத வளர்ச்சிக்கும், பாளி இலக்கிய வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியிருந்ததுடன், புகழ்பெற்ற தமிழ் பௌத்த காப்பியங்களான மணிமேகலை, குண்டலகேசி ஆகிய இலக்கியங்களைப் படைத்திருந்தனர். பௌத்த கட்டிட சிற்பக் கலைகளும் உச்சகட்ட வளர்ச்சியை அடைந்தன. இக்காலப்பகுதியில் பௌத்த உலகின் முப்பெரும் அறிஞர்களாக கருதப்படும் புத்தகோசர், புத்ததத்தர், மற்றும் தர்மபாலர் ஆகியோர் தமிழ்நாட்டுப் பௌத்தப் பள்ளிகளில் சேவையாற்றியதுடன் பாளி நூல்களையும், உரை நூல்களையும் எழுதினார்கள். இவர்களில் புத்தகோசர் பற்றி பெரிதும் அறியமுடியவில்லையாயினும் புத்ததத்தர் மற்றும் தர்மபாலர் ஆகிய இருவரும் தமிழ்ப் பௌத்த அறிஞர்களாக தமிழகத்தில் நன்கு அறியப்பட்டிருந்தனர்.

சோழநாட்டில் பிறந்து, கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான தமிழ் பௌத்த பிக்குவான புத்ததத்தர் காவிரிப் பூம்பட்டினம், காஞ்சி, உறையூர், அநுராதபுரம் போன்ற இடங்களில் இருந்த பெரும் பௌத்த பள்ளிகளில் பல பதவிகளை வகித்தவராவர். இவர் அநுராதபுரத்திற்கு சென்று பல நூல்களை பாளி மொழியில் மொழிபெயர்த்தெழுதியும், புதிதாக உரை நூல்களை பாளிமொழியில் எழுதியும் புகழ்பெற்றார். புத்தகோசர் அநுராதபுரத்தில் வாழ்ந்த காலத்தில் அங்கிருந்த மக்கள் பௌத்த போதனைக ளைத் தமிழில் கேட்டு விளங்கிக் கொள்ளக்கூடிய நிலையில் இருந்தனர். தமிழ் தேரவாத பௌத்த பிக்குகள் பெற்ற முக்கியத்துவம் காரணமாகத் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் தேரவாத பௌத்த மதம் பெற்ற செல்வாக்கினை அறிந்துகொள்ள முடிகின்றது. மேலும் தேரவாத பிக்குகளைப் போன்று சிறப்பு பெற்ற மகாயானப் பௌத்த பிக்குகளும் தமிழ் நாட்டில் தோற்றம் பெற்றனர். தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற மகாயான பௌத்த பிக்குவாக காஞ்சியில் பிறந்த திண்ணாகர் (திக்நாக) குறிப்பிடத்தக்கவராவர். இலங்கையில் மகாசேன மன்னன் காலத்தில் ஏற்பட்ட வணிக வளர்ச்சியின் காரணமாக இந்தியத் துறைமுகங்களிலிருந்து வணிகர்களுடன் மத குருமார்களும் தென்கிழக்காசியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்கு பௌத்தத்தினைப் பரப்பினர். தமிழ்நாட்டிலிருந்து சென்ற பௌத்த குருமார்களும் ஏனைய பௌத்த குருமாரைப் போன்று பாளி, சமஸ்கிருத பெயர்களைக் கொண்டிருந்தமையால் அவர்களது பெயர்கள் பல ஆவணங்களில் பேணப்பட்டிருந்தாலும் அவர்களைத் தமிழ் நாட்டார் என அடையாளம் காணமுடியாதுள்ளது. குறிப்பாக, சீனாவிற்கு சென்று பௌத்த மதத்தினை பரப்பிய தமிழ்ப் பௌத்த துறவியான போதிதர்மர் (காஞ்சி பௌத்த பள்ளியைச் சேர்ந்தவர்) குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர் ஆவார். இத்தகையதோர் பின்னனியில் தமிழ் பௌத்தர்கள் தமிழ் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்ததுடன் பாளி இலக்கிய வளர்ச்சிக்கும் பணியாற்றியுள்ளனர்.

தமிழ்நாட்டுப் பிக்குகள் இலங்கைக்கு வந்தது போல இலங்கையிலிருந்தும் பிக்குகள் தமிழ்நாட்டிற்கு சென்றடைந்தமைக்கும் சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மகாவம்ச கூற்றின் படி இலங்கையில் மேகவர்ணன் (கோதாபாயன்) தனது ஆட்சிக் காலத்தில் (கி.பி 254 - 266) தேரவாத மதக் கொள்கைக்கு மாறான அபயகிரி விகாரையி

லிருந்து 60 மகாஜானப் பிக்குகளைக் கைது செய்து மறுகரைக்கு (தமிழ்நாட்டிற்கு) அனுப்பினான் எனக் கூறுகின்றது (மகாவம்சம்: XXXVL:111-112). வட்ட காமினி காலத்தில் (கி.மு.103) ஏற்பட்ட கடும்பஞ்சம் காரணமாக சங்கத்திற்கான ஆதரவு குறைந்தபோது அவர்கள் தமிழ்நாடு சென்று அங்கிருந்த பௌத்த விகாரையில் தங்கியிருந்துவிட்டு பின்னர் திரும்பியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அநுராதபுர இராசதானி காலத்தில் கி.மு 2ஆம் நூற்றாண்டில் 44 ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி செய்த எல்லாளன் (கி.மு 145 - 101) என்ற தமிழ் மன்னனும், கி.மு 3ஆம் நூற்றாண்டில் 22 ஆண்டுகள் (கி.மு 177- கி.மு 155) ஆட்சி செய்த சேனன், குத்திகன் ஆகிய இரு தமிழ் மன்னர்களும் தமது பழைய மத நம்பிக்கையை கைவிடாத போதிலும் பௌத்த மதத்திற்கு ஆதரவாக ஆட்சி செய்தார்கள் என மகாவம்சம் கூறுகிறது (மகாவம்சம், XXI:34). கி.மு முதலாம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை வெற்றி கொண்ட 7 தமிழர்களில் 5 பேர் அநுராதபுரத்தில் ஆட்சி செய்தபோது அவர்களில் ஒருவன் பிச்சா பாத்திரத்துடன் தமிழகம் சென்றதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது (Mahavamsa. XXXIIII:55). இதே காலப்பகுதியில் ஆட்சிபுரிந்த நீலியன், வடுகன் போன்ற தமிழ் மன்னர்கள் அனுலா என்ற பௌத்த அரசியை பட்டத்து அரசியாகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர் (Mahavamsa. XXXIV:19-26). மேலும் தேவ நம்பியதிஸ்ஸன் ஆட்சிக்காலத்தின் போது அமைச்சராக இருந்த அரிட்டன் என்பவன் பௌத்த தூதுக்குழுவிற்குத் தலைமை தாங்கி பாடலிபுரம் சென்று பிற்காலத்தில் பௌத்த பிக்குவாக மாறி பாண்டி நாட்டிற்குச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இவ்வாதாரங்கள் தமிழ்நாட்டில் பௌத்த மதம் பெற்ற வளர்ச்சியினையும், தமிழகத்திற்கும் இலங்கைக்குமிடையிலான பௌத்த மத தொடர்புகளையும் சுட்டிக் காட்டுவதுடன் தமிழகத்தைப்போல் சமகாலத்தில் இலங்கையிலும் தமிழர்களில் கணிசமானவர்கள் பௌத்தர்களாக, பௌத்த மதத்தினை ஆதாரித்தவர்களாக இருந்திருக்கலாம் என்பதனையும் எடுத்துக் காட்டுகின்றது. இக்கருத்தினை மேலும் உறுதிப்படுத்தும் விதமாக இலங்கையில் கிடைக்கப்பெற்ற இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் அமைந்துள்ளன. இப்பிராமிச் சாசனங்கள் பெரும்பாலும் பௌத்த மதத் துறவிகளுக்கு வழங்கப்பட்ட தானம் பற்றிய செய்திகளையே விபரிக்கின்றன. இந்தவகையில் இக்கல்வெட்டுக்களில் வரும் ஆய், வேள், குடும்மிகன், பரத, பருமக, பருமகன், பருமகள், சுமணன், சுமன், அபயன், மல்லன், பூதன், பரத, மாற, சோட, நாக போன்ற பெயர்கள் தமிழர்களும் பௌத்த மதத்தைப் பின்பற்றியதற்குச் சான்றாகும். இப்பிராமிச் சாசனங்களில் வரும் பிராகிருத மொழிக்குரிய பல தனிநபர் பெயர்களும், பிராகிருதமயப்படுத்தப்பட்ட தமிழ்ப் பெயர்களும் தமிழர்களுக்குரிய பெயர்களாக இருந்துள்ளன. இதற்கு சமகாலத்தில் இலங்கையில் வெளியிடப்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்களில் வரும் உதிரன், கபதிகன், மகாசாத் தன், சபிஜன் போன்ற பெயர்கள் சான்றாகும் (புஸ்பரட்ணம், 2001, 37-70). செ. கிருஸ்ணராஜா கந்தரோடையில் பிராமி எழுத்துப்பொறித்த மட்பாண்ட ஓடுகள் பலவற்றைக் கண்டுபிடித்திருந்தார். இதில் "குணி" என பொறிக்கப்பட்ட மட்பாண்ட சாசனம் முக்கியம் பெற்றதாகும் (கிருஸ்ணராஜா, 1998: 50). மேலும் வவுனியாவில் பெரியபுளியங்குளம், அநுராதபுரம்,

அம்பாறையில் குடுவில், திருகோணமலையில் சேருவில் போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற பிராமிக் கல்வெட்டுகள் தமிழ் வணிகர்களால் பௌத்த துறவிகளுக்கு, பௌத்த சங்கத்திற்கு வழங்கிய குகைகள், கற்படுக்கைகள் என்பன பற்றிக் கூறுகின்றன (Paranavithana,1970 : 1 - 30). பண்டைய அநுராதபுர காலத்தில் தமிழர்கள் பௌத்தர்களாகவும், இந்துக்களாகவும் வாழ்ந்துள்ளனர். இவர்களால் சமய நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்ட தானங்கள் பற்றிய செய்திகள் சிங்களத்திலும், தமிழிலும் உள்ளன. அநுராதபுர, அறகம கல்வெட்டு செய்திகளின் படி கி.பி 5ஆம் நூற்றாண்டில் பண்டு தலைமையில் அநுராதபுரத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்த தமிழ் மன்னர்களான பரிந்த, குட்டபரிந்த ஆகியோர் பௌத்த மதத்திற்கு ஆதரவாக ஆட்சி புரிந்ததை அறிய முடிகின்றது (Epigraphia Zeylanica IV:111-115).

பதினாறு ஆண்டுகள் ஆட்சி புரிந்த குட்டபரிந்தன் பௌத்த மதத்திற்கு ஆற்றிய தொண்டின் காரணமாக 'பரிந்ததேவன்', 'புத்ததாசன்' என்ற நாமங்களால் அநுராதபுரக் கல்வெட்டில் புகழப்படுகின்றான். பரிந்தனின் அறகமக் கல்வெட்டு பௌத்த மதத்திற்கு ஆற்றிய தொண்டினை முக்கியப்படுத்துகின்றது. இதனைத் தொடர்ந்து எட்டாம், ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளில் தமிழ்ப் பௌத்தர்களால் கொடுக்கப்பட்டதானங்கள் தமிழ் கல்வெட்டுக்களாகப் பொறிக்கப்பட்டதனைக் காணலாம். இலங்கையில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுக்களில் மிகப் பழமை வாய்ந்தவையான பங்குளிய விகாரைத் தமிழ்க் கிரந்த கல்வெட்டுக்கள், அபயகிரி விகாரை வளாகத்துள் கண்டெடுக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டு போன்றன பௌத்தமத செய்திகளினைக் குறிப்பிடும் அதேவேளை தமிழ்மொழியில் அமைந்திருப்பது பௌத்த மதத்தின் மேல் தமிழர்களுக்கிருந்த ஈடுபாட்டினைப் புலப்படுத்துகின்றது. அபயகிரி விகாரைக் கல்வெட்டு கி.பி 8ஆம் நூற்றாண்டுக்குரியதாய் விளங்குவதோடு அபயகிரி விகாரையுடன் தமிழர்களுக்கிருந்த தொடர்பைப் பறைசாற்றுகின்றதெனலாம் (பத்மநாதன், 2006:39-40). அநுராதபுரத்தில் தமிழ், கிரந்த மொழிகளில் பொறிக்கப்பட்ட கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிற்குரியதான நான்கு நாட்டார் கல்வெட்டும் தமிழ் பௌத்தத்திற்குரிய முக்கிய சான்றாகும். இக் கல்வெட்டு நான்கு நாட்டார் என்ற தமிழ் வணிக குழுவினரால் மாக்கோதைப் பள்ளி என்ற பௌத்தப் பள்ளிக்கு வழங்கப்பட்ட கொடைகள் பற்றிக் குறிப்பிடுகின்றன. அத்துடன் தர்மபாலர் என்ற பௌத்தத் துறவியைப் போற்றும் செய்யுளும் இக் கல்வெட்டில் அமைக்கப்பட்டுள்ளது. (தர்மபாலர் என்ற பெயரைப் பெற்ற தமிழ்ப் பௌத்த துறவிகள் பற்றி பாளி இலக்கியங்களில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது).



அபயகிரி வளாகத்துக் கல்வெட்டு

இலங்கையில் சோழராட்சி நிலவிய கால கட்டத்தில் இலங்கைப் பௌத்த சங்கத் திற்கும், தமிழக சோழநாட்டு பௌத்த சங்கத்திற்கும் இடையில் நெருங்கிய நட்புறவு பேணப்பட்டது. சோழநாட்டுப் பௌத்த துறவியான தீபங்கரர் இலங்கை யில் சிங்களப் பௌத்த துறவியான ஆனந்த வரைதன என்பவரிடம் கல்வி கற்றார். இவர் சோழங்க தீபங்கர் என இலங்கையில் அழைக்கப்பட்டார். இவரைப் போல சோழ நாட்டைச் சேர்ந்த காசியப்பர், புத்தமித்தரர், ஆனந்தர், அநுரத்தர் முதலான தமிழ்ப் பௌத்த துறவிகள் இலங்கையில் பணி புரிந்ததற்கு ஆதாரங்கள் காணப்படுகின் றன. மேலும் சிங்கள பௌத்த சங்கத்திற்கு நெருக்கடிகள் ஏற்படும் போதெல்லாம் அவர்கள் சோழ நாட்டுப் பௌத்த சங்கத்தி னரின் உதவியை நாடினர். அந்த வகையில் 2ஆம் பராக்கிரமபாகு காலத்தில் சீர்கெட்டி ருந்த பௌத்த சங்கத்தினை சீர்திருத்தி அதனை மீளமைக்கும் நோக்கில் சோழ நாட்டிற்கு பல கொடைகளை அனுப்பி ஒழுக்கம் நிறைந்த பௌத்த திரிபீடகத்தை கற்றுத் தெளிந்த சோழநாட்டு தமிழ்ப் பௌத்த துறவிகளை இலங்கைக்கு வரவழைத் ததாக சூளவம்சம் குறிப்பிடுகின்றது. (Culavamsa, 84: 7 - 10).

தமிழ் பௌத்தத்துடன் தொடர்புடைய பல தமிழ் கல்வெட்டுக்கள் திருகோணமலை யில் கிடைக்கப் பெற்றிருப்பதானது இலங்கை யில் சோழர் ஆட்சிக் காலம் வரையிலாவது தமிழர்களில் ஒரு பிரிவினர் பௌத்தர்களா கவும் பௌத்த மதத்தினை ஆதாரித்தவர்க ளாகவும் இருந்துள்ளனர் என்பதனை அறிய உதவும் முக்கிய சான்றாதாரமாக அமைகின் றது.

புராதன, இடைக்கால இலங்கை வரலாற் றில் இங்கிருந்த தமிழ் மக்களும் பௌத்த மதத்தினை பின்பற்றியமைக்கான ஆதாரங் கள் காணப்படும் இடங்களை கி.பி 14-15 ஆம் நூற்றாண்டளவில் எழுந்ததாகக் கூறப்படும் நம்பொத்த என்ற சிங்கள இலக்கியத்தினூடாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. அவ்விலக்கியத்தில் "தெமிள பட்டினத்தில் (தமிழ்ப்பட்டினம்) பௌத்த யாத்திரிகர்கள் சென்றுவரக்கூடிய இடங்க ளாக தெல்லிப்பளை, மல்லாகம், நாகர் கோவில், வீமன்காமம், ஊர்காவற்துறை, நயினாதீவு, காரைதீவு, புங்குடுதீவு, தனத் தீவு (நெடுந்தீவு) முதலான இடங்கள் கூறப்பட் டுள்ளன. இற்றைவரை யாழ் குடாநாட்டில் பௌத்தமத தொல்லியல் எச்சங்கள் காணப் படும் இடங்களாகவும் மேற்கூறிய இடங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான சான்றாதாரங்கள் மற்றும் யாழ்குடாநாட்டிலும், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா போன்ற மாவட்டங்க ளிலும் கிடைக்கப்பெற்ற பௌத்தமதம் தொடர்பான கட்டிட, சிற்பக் கலைமரபுகளும் வட இலங்கையில் பௌத்தமதம் பெற்றி ருந்த செல்வாக்கினை உறுதிப்படுத்த உதவும் முக்கிய ஆவணங்களாகும். எனினும் பௌத்தமதம் இலங்கைக்கு பரவிய காலந் தொட்டு கி.பி 6ஆம், 7ஆம் நூற்றாண்டு வரையுமே இங்கு செல்வாக்கு பெற்றிருந்த தனை காணமுடிகின்றது. குறிப்பாக திருகோணமலையில் கிடைத்த சோழக் கல்வெட்டுக்கள் கிழக்கிலங்கையில் சோழர் ஆட்சிக்காலம் வரையில் தமிழர்கள் பௌத்தத் துடன் கொண்ட தொடர்பை உறுதிப்படுத்து கின்றன. இதன் பின்னரான சான்றாதாரங்களின் படி பௌத்தம் தமிழர் வாழ்வியலிலிருந்து மறைந்துவிட்ட தன்மையினைக் காண முடிகின்றது. இவ்வாறானதொரு வரலாற்றுச் சூழ்நிலைக்கு வரலாற்று, தொல்லியாளார்கள் பின்வரும் காரணங்களை ஆதாரங்களுடன் முன்வைத்துள்ளார்கள்.

1. மொழியடிப்படையில் சிங்களமொழி பேசிய மக்களை பௌத்தமதத்துடன் தொடர்புபடுத்தியதைப் போல் தமிழ்மொழி பேசிய மக்களை பௌத்தத்துடன் தொடர்பு படுத்த முடியாமை.

அதாவது பாளி, பிராகிருத மொழிகளுக் குரிய பெருமளவு சொற்களை அடிப்படை யாகக் கொண்டு பிற்காலத்தில் சிங்கள மொழி தோற்றம் பெற்றது. இம் மொழி காலப்போக்கில் பௌத்த மதத்துடன் இரண்டறக் கலந்தது. இதுவரை பௌத்த மதத்தில் பாளி, பிராகிருத மொழிகள் பெற்ற செல்வாக்கை இம்மொழியும் பெற்றது. இந் நிலையில் தமிழைப் பேச்சு மொழியாகவும், பாளி, பிராகிருத மொழிகளை பௌத் தத்திற்குரிய மொழியாகவும் கொண்டிருந்த தமிழர்களில் ஒரு பிரிவினர் மொழியை விட பௌத்த மதத்தை அதிகம் நேசித்ததனால் அவர்களும் காலப்போக்கில் சிங்கள மொழி பேசும் மக்களாக மாறியிருக்க வேண்டும் (புஸ்பரட்ணம், 2002 :159).

2. அநுராதபுரம் போன்ற பகுதிகளில் பௌத்த மதம் பௌத்த சங்கத்தினுடைய செல்வாக்கினைப்பெற்று ஒரு சொத்துடை நிறுவனமாக வளர்ந்தது போன்று தமிழ் மக்களை பெரிதும் கொண்ட தற்போதைய பிராந்தியங்களில் பௌத்தம் நிறுவன ரீதியாக வளராமை.

3. தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்க ளும் அதன் பின்னணியில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் தாக்கமும், வணிக கணங்களின் எழுச்சியும், இலங்கை மீதான படையெடுப்புக் களும் தமிழர் பிராந்தியங்களிலிருந்த பௌத்த மதத்தினை பலவீனமடையச் செய்தது.

இவ்வாறான காரணங்களால் இந்து மதத்திற்கு முன்னோடியாக அமைந்த வரலாற்றுக்கு முற்பட்டகால மத நம்பிக்கை யுடன் இணைந்து தமிழர்களில் ஒருபிரிவினர் இந்துக்களாக மாறினர். இதன் காரணமாக இந்துசமயம் அதன் வரலாற்றுக்கால ஆரம்ப வளர்ச்சி நிலையிலும் பார்க்க, கி.பி 6ஆம் நூற்றாண்டினை தொடர்ந்து தமிழகத்தி னைப் போன்று தமிழர் பிராந்தியங்களில் செல்வாக்கு பெறத்தொடங்கியது. மேலும் பௌத்தர்களாக காணப்பட்ட தமிழர்களில் ஒரு பிரிவினர் மீண்டும் இந்து மதத்திற்கு மாறிக்கொள்ள மற்றைய பிரிவினர் தீவிர பௌத்தர்களாக மாறியதுடன் மொழியாலும் சிங்களவர்களாக மாறியிருக்கலாம்.

## ஆய்வு முறையியல்

இரண்டாம் நிலைத்தரவுகளை அதிகம் முதன்மைப்படுத்திய விபரணவியல் ஆய் வாக இது அமைந்த போதும், முதன்நிலைத் தரவுகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற் கொள்ளப்பட்ட தொல்லியல் களப்பயணங்கள் மற்றும் யாழ்ப்பாண தொல்லியல் அருங்காட்சி யகத்திலிருந்தும் பெறப்பட்டுள்ளன. இவ் அருங்காட்சியகத்தினைச் சேர்ந்தவர்களி டம் பெறப்பட்ட நேர்காணல் ஊடாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அத்துடன் இவ்வாய்வுக்குரியதரவுகள் இலங்கையில் பௌத்தமதம் பற்றிக் குறிப்பிடும் மூல நூல்களிலிருந்தும், இம்மூல நூல்களை அடிப்படையாகக் கொண்டெழுந்த இரண்டாம் நிலை நூல்களிலிருந்தும் மற்றும் யாழ்ப்பாணத் தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகளின் அறிக்கைகள் என்பவற்றினூடாகவும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. மேற்கூறிய தரவுகள், தகவல்களை தொகுத்து ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## ஆய்வுமுடிவுகளும், முன் மொழிவுகளும்

தொல்லியல் களப் பயணங்கள், யாழ்ப்பாண தொல்லியல் அருங்காட்சியகத்தினைச் சேர்ந்தவர்களிடம் பெறப்பட்ட நேர்காணல் ஊடாகவும் பெறப்பட்ட தரவுகள் மற்றும்

இலக்கிய ஆதாரங்களினையும் ஆராய்ந்து பார்க்கும் போது, யாழ்ப்பாணக் குடாநாட்டில் மேற்குறிப்பிட்ட வரலாற்றுப் பின்னணியில் பின்வருவனவற்றை பௌத்த மதம் சார்ந்த தொல்லியல் மரபுரிமைகளாக அடையாளப் படுத்த முடிகின்றது.

## யாழ்ப்பாணக் குடாநாட்டின் பௌத்த மத மரபுரிமைகள்

### கந்தரோடை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல்வேறு காலப் பகுதிக்குரிய தொல்லியல் சின்னங் கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் கந்தரோடைக்குத் தனிச்சிறப்புண்டு. இங்கு 1918ஆம் ஆண்டு போல்.இ.பீரிஸும், 1960 ஆம் ஆண்டு இலங்கைத் தொல்லியல் திணைக்களமும், 1970களில் பென்சில் வேனியப் பல்கலைக்கழகத்தினைச் சேர்ந்த விமலா பெக்லே தலைமையில் மேற் கொண்ட ஆய்வுகளும் முக்கியம் பெற்றவை யாகும் (Pieris, 1917:19, 57 62, Begley, 1973: 191-196). இங்கு பௌத்தமதம் பரவுவதற்கு முன்னரே கி.மு 5ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட வகையிலான பெருங்கற்கால பண் பாடு சிறப்பு பெற்றிருந்ததனை தொல்லியல் ஆய்வுகள் எடுத்து காட்டுகின்றன. அண்மைக் கால ஆய்வுகளில் இலங்கையில் கி.மு. 6ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியர் காலம் வரை பயன்படுத்தப்பட்ட அனைத்து மட்பாண்டங்க ளும் காணப்படும் மையமாகக் கந்தரோடை காணப்படுகின்றது. இவை கந்தரோடையை வட இலங்கையின் முதன்மை தொல்லியல் மையமாக எடுத்துக்காட்டுகின்றது. வட இலங்கையில் குறிப்பாக குடாநாட்டின் பூர்வீக குடியேற்றம் பற்றி ஆய்வு செய்த பொ.ரகுபதி 40 இடங்களில் பண்டைய குடியிருப்புக்கள் இருந்ததாக குறிப்பிட்டு அதில் தலைமைக் குடியிருப்பாக கந்தரோடை யைக் குறிப்பிடுகின்றார். (Ragupathy, 1987 : 57-62).

இலங்கையின் புரதான வரலாற்றினைக் கூறும் இலக்கிய வரலாற்று மூலாதாரங்க ளில் இவ்விடத்தின் பெயர் இடம்பெற்றிருக்க வில்லை. ஆனால் கி.பி. 14 ஆம் நூற்றாண் டில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட நம்பொத்த என்ற நூலிலே இடம்பெறும் கதுறுகொட என்ற பதமானது கந்தரோடையி னைக் குறிப்பிடுவதாக அறிஞர்கள் குறிப்பிடு கின்றனர். நம்பொத்த என்ற சிங்கள நூலிலே பௌத்த நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்களைப் பற்றி விபரிக்கும் போதே "கதுறுகொட" என்ற இடப்பெயரும் இடம் பெற்றுள்ளது. கி.பி 14ஆம் நூற்றாண்டில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட "சமதர் மலங்கார" என்ற நூலில் கூறப்பட்டுள்ள பஞ்சதந்திரக் கதையை ஒத்துள்ள ஒரு கதையில் கந்தரோடை பற்றிய குறிப்பு ஒன்று இடம்பெறுவதனைக் காணமுடிகின்றது. கந்தரோடையில் பௌத்த சிற்ப வடிவங்கள் பல கிடைக்கப் பெற்றுள்ளன. அவை ஆந்திர கலை மரபுடன் நெருங்கிய தொடர்புடையனவாக அடையாளப்படுத்தப்பட்டன. வட இலங்கையு டன் ஆந்திரா கொண்டிருந்த வணிகத் தொடர்பினை புலப்படுத்துவதாக பௌத்த சிற்பங்கள் மட்டுமன்றி கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பனவும் கிடைக்கப் பெற்றுள்ளன. கந்தரோடையில் கி.பி 3ஆம், 4ஆம் நூற்றாண்டுக்குரியதான 'விஸ்ணு பூதியஸ்' என்ற பெயர்பெறிக்கப்பட்ட முத்திரையொன்று கண்டுபிடிக்கப்பட்டது (இந்திரபாலா, 2006 : 330). இம்முத்திரைச் சாசனமானது ஆந்திர வணிகனுக்குரிய தாகவே கூறப்பட்டுள்ளது. மேலும் வல்லி புரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பொற்சாசனம், கௌதமபுத்திர சாதகர்ணி காலத்துக்குரிய நாணயம் போன்றனவும் ஆந்திராவுடனான வடஇலங்கைத் தொடர்பை புலப்படுத்துவன வாகும். இவை வரலாற்றின் ஆரம்ப காலத்தி லிருந்து கி.பி 4ஆம் நூற்றாண்டுவரை

இலங்கையில் ஆந்திரப் பண்பாட்டுச் செல்வாக்கு இடம்பெற வர்த்தகத் தொடர்பு களே அடிப்படையாக அமைந்திருந்தன என்பதனைப் புலப்படுத்துகின்றன.

கந்தரோடையில் பௌத்த சமயச் சின்னங்கள் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் அடங்கிய படைகளிற்கு மேல் உள்ளதோடு, இங்குள்ள பௌத்த சின்னங்கள் தனிப்பண்பு கொண்டவை. அதாவது அனுராதபுரம், மிகுந்தலை, மகாகமை முதலான இடங்களில் கண்டு பிடித்த பௌத்த சின்னங்களைக் காட்டிலும் வேறுபட்டவை. இங்கு சிறியளவிலான தூபிகள் பல நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளன. இவை போன்ற அண்ட வடிவமான கட்டுமானங்கள் ஆந்திராவின் அமராவதி, நாகர்ச்சுனகொண்டா, நாளாந்தா, குண்டுப் பள்ளி போன்ற பல இடங்களில் காணப்படு கின்றன. இத்தூபிகளில் இறந்த பௌத்த பிக்குமாரின் சாம்பல் முருகைக் கற்களில மைந்த பேழைகளில் அடக்கம் செய்யப்பட் டுள்ளன (சிற்றம்பலம், 1993 :15). தற்போதைய நிலையில் கந்தரோடையில் மொத்தமாக 57 சிறிய தூபி அமைப்புக்கள் அடையாளப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 22 மட்டுமே தூபி அமைப்பாகவும் ஏனையவை தூபிகளுக் குரிய அத்திவாரப் பகுதியாகவுமேயுள்ளன. இத்தூபி அமைப்பில் ஆகக்குறைந்த அளவு உள்ள தூபியின் விட்டம் ஆறு அடியாகவும், ஆகக் கூடிய தூபியின் விட்டம் 23 அடியுமா கும். இத்தூபிகள் இயற்கையாக இங்கு கிடைக்கப்பெற்ற முருகைக் கற்கள், சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு அழகாக செதுக்கப்பட்ட முறையில் அமைக்கப்பட்ட வையாகும். எனினும் இத்தூபி அமைப்புக்கள் தொல்லியல் திணைக்களத்தினரால் புனர மைப்பிற்கு உட்படுத்தப்பட்ட வகையில் புதிய கற்கள் கொண்டு அமைக்கப்பட்ட முறையி னையும் காணமுடிகின்றது. இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தினரால் கந்தரோடை புராதன குடியிருப்புகளுக்குரிய மையம் 1868/2014-06-20 என்ற இலக்கத்திலும், கந்தரோடை பௌத்த மையம் 14763/ 1967-08-25 என்ற இலக்கத்திலும் பதிவு (Gazetted) செய்யப்பட்டுள்ளது. கந்தரோடைத் தூபிகளின் சிதைவுகளும் யாழ்ப்பாண அருங்காட்சிய கத்தில் வைக்கப்பட்டுள்ளன.

## நெடுந்தீவு

வடக்கு, கிழக்கு இலங்கையில் வாழ்ந்த தமிழர்களிடையே பௌத்த மதம் பெற்ற செல்வாக்கினை உறுதிப்படுத்துவதில் நெடுந்தீவில் காணப்படும் பௌத்த தூபி அமைப்புகளுக்கு முக்கிய பங்குண்டு. இவை கந்தரோடையில் உள்ள நினைவுத் தூபி அமைப்பினை ஒத்தவையாக ஆந்திரா தொடர்பைப் புலப்படுத்துவதாக உள்ளன. எனினும் நெடுந்தீவின் முருகைக் கல்லினா லான தூபிக்கட்டுமான அமைப்பானது முழுகட்டுமானமாக அன்றி வட்டவடிவில் அரைத்தூபி எச்சங்களாகவே உள்ளன. இப் பௌத்த தூபி அமைப்பில் காணப்படும் மூன்று கல்வெட்டுக்கள் தமிழ் மக்களி டையே நிலவிய பௌத்தம் பற்றி அறிய உதவும் மிக முக்கிய ஆதாரங்களாகும். இவை 15,16 ஆம் நூற்றாண்டுக்குரியதாக வும், தமிழ், கிரந்த மொழிக் கல்வெட்டுக்க ளாகவும் காணப்படுகின்றன (புஸ்பரட்ணம், 2017, 46). நெடுந்தீவில் உள்ள பௌத்த தொல்லியல் தளமானது 2011ஆம் ஆண்டு இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு (1739/2011-12-30) அதன் புனரமைப்பு, மீள் கட்டுமான நடவடிக்கைகள் இடம் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## சங்கமித்தா நினைவுச்சின்னம் மற்றும் சங்கமித்தா நினைவு மரம்

பாளி இலக்கியமான மகாவம்சம் கி.மு 3ஆம் நூற்றாண்டளவில் பௌத்த மதத்திற் குரிய புனித சின்னமான வெள்ளரசுக்கிளை ஜம்புகோளப்பட்டினத்தில் வந்திறங்கி, அங்கிருந்தே அநுராதபுரம் கொண்டு செல்லப்பட்டதாக குறிப்பிடுகின்றது. மேலும் மகாவம்சம் தேவநம்பியதீஸன் ஜம்புகோளத்திற்கு அண்மையில் திஸமாரகம விகாரையையும், அதற்கு வெளியே பஞ்சினராமா விகாரையையும் கட்டினான் எனவும், இவ் விகாரை பின்னரான காலப்பகுதிகளில் கனிட்டதீஸன் (கி.பி 167 - 186), வொகரிக தீஸன் (209 - 211), மற்றும் முதலாம் விஜயபாகு மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் புதுப்பித்துக் கட்டப்பட்டதாகவும் குறிப்பிடு கின்றது (மகாவம்சம் 11:23, 28, 19:23-26, 60:20-13). இவ்வாறான மகாவம்ச செய்திகளின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் ஜம்புகோள துறைமுகப்பட்டினம் என முன்பு பெயர் வழங்கிய பகுதியில் இன்று மாதகல் மேற்கு, J/152 கிராமவேவையாளர் பிரிவில் சம்பில்துறை (ஜம்புகோளப்பட்டினம்)- சங்கமித்தா நினைவுச்சின்னம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இத் தொன்மையான இடம் 2007ஆம் ஆண்டு இலங்கையின் தொல்லியல் சட்டத்தின் பிரகாரம் பதிவு (Gazetted number: 1486/2007-02-23) செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது சுழிபுரம் கிழக்குப் பகுதியில் உள்ள பறாளை முருகன் கோவிலின் உட்பகுதியில் உள்ள அரசமரம் சங்கமித்த நினைவு மரமாக தொல்லியல் திணைக்களத்தினரால் அடையாளப்படுத்தப் பட்டுமுள்ளது.

## நயினாதீவு

வரலாற்றுப் புகழ்பெற்ற நயினாதீவு யாழ்ப்பாணத்திலிருந்து ஏறக்குறைய பதினெட்டு மைல் தூரத்தில் தென்மேற்காக அமைந்துள்ளது. புராதன வழிபாட்டு தலங்களில் ஒன்றாகவும் நயினாதீவு சிறப்பு பெறுகின்றது. இத்தீவானது நாகதீவு, நாகத்தீவு, நாகதிவயின, நாகநயினார்தீவு, நயினார்தீவு, நாகதீபம், நாகவலந்தீவு, பூந்தோட்டம், சம்புத்தீவு, மணிபல்லவம், மணிபல்லவத்தீவு, மணிநாகதீவு, மணித் தீவு, பிராமணத்தீவு, நரித்தீவு போன்ற பல பெயர்களாலும் அறியப்படுகின்றது. நாகதீவு என்பது நாகர்களின் குடியிருப்பாலும், நாகவழிபாட்டாலும் ஏற்பட்ட பெயராகும். மணித்தீவு, மணிநாகதீவு என்ற சொல் நாகரத்தினத்தை குறிக்கின்றது. அதாவது நாகரத்தினத்தை வாங்க வந்த வணிகர்களி னால் இப்பெயரால் கொண்டு அழைக்கப்பட் டதாகவும், பிராமணத்தீவு என்பது 1658 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பின் படி பிராமணர்கள் பெரும்பான்மை யாக வாழ்ந்ததால் இப் பெயரைப் பெற்றதா கவும் கூறப்படுகின்றது. இவ்வாறு இத்தீவு பற்றிய பெயர்கள் யாவும் காரணப் பெயர்க ளாகவே காணப்படுகின்றன.

மகாவம்சம், மணிமேகலை மற்றும் நம்பொத்த போன்ற இலக்கிய செய்திக ளூடாக ஒரளவு இத்தீவில் பௌத்தமதம் பெற்ற செல்வாக்கினை அறிந்து கொள்ள முடியும். குறிப்பாக மணிமேகலையில் புத்தபிரான் குளோதர, மகோதர என்ற இரண்டு நாக அரசர்களிடையே ஏற்பட்ட போரைத் தீர்த்து வைக்குமுகமாக நாக தீவுக்கு விஜயம் மேற்கொண்டார் என்றும், இங்கு புத்தபீடிகை ஒன்றும், கோமுகி என்னும் பொய்கையும் இருந்ததாகவும், மணிமேகலை புத்தபீடிகையின் உதவியால் தனது பழம்பிறப்பை உணர்ந்தாள் எனவும், இக்கோமுகியிலே அமுதசுரபி என்னும் பாத்திரத்தை பெற்றதாகவும் கூறப்படு கின்றது.

புராதன காலத்திலிருந்து நயினாதீவுத் துறைமுகங்களுக்குக் காலத்திற்கு காலம் பல்வேறு நாட்டு வணிகர்களும், யாத்திரிகர் களும் வந்து சென்றுள்ளனர். இங்கு கிரேக்க, உரோம, இந்திய, சீன நாடுகளுக் குரிய புராதன நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. சீனாவின் கி.பி 12ஆம் நூற்றாண்டுக்குரிய சாடிகள் நயினாதீவுக் கிணறு ஒன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட் டுள்ளன. அத்துடன் இங்கு கண்டுபிடிக்கப் பட்ட 1ஆம் பராக்கிரமபாகு மன்னன் காலத்திற்குரிய கல்வெட்டு ஒன்றில் பல வெளிநாட்டுக் கப்பல்கள் நயினாதீவுத் துறைமுகத்திற்கு வந்துள்ளமையினை அறியமுடிகின்றது. இவ்வாறு ஆதிகால, இடைக்கால இலங்கை வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற நயினாதீவானது இன்றைய நிலையில் நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் பௌத்த வழிபாட்டு மையம் என்பவற்றின் பின்னணியில் முக்கிய சுற்றுலாமையமாகவும் சிறப்பு பெறுகின்றது.

### பௌத்த சிற்பங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பௌத்த மதத்திற்குரிய தொல்லியல் மரபுரிமைகள் கிடைக்கப்பெற்ற இடங்கள் மற்றும் தளங்க ளாக கந்தரோடை, வல்லிபுரம், நாகர் கோவில், சுன்னாகம், மாகியப்பிட்டி, புத்தூர் -நிலாவரை, உடுவில், மல்லாகம், தெல்லிப்பளை, மந்துவில், வேலணை, வேரப்பிட்டி, பொன்னாலை, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு போன்றனவற்றைக் குறிப்பிடலாம். (Pieris, 1917, 1919: 40 - 67, இந்திரபாலா, 2006: 235- 6). கந்தரோடை அகழ்வாய்விலும் மேலாய்விலும் ஏராள மான பௌத்த சிற்பங்கள் வெளிக்கொண ரப்பட்டன. இங்கு மேற்கொண்ட அகழ் வாய்வில் கண்டுபிடித்த வெண்வைரக் கல்லால் உருவாக்கப்பட்ட சிற்பம் அமராவ திக் கலைமரபினைப் பிரதிபலிக்கின்றது. மேலும் இங்கு தலைகள் அற்ற நிலையிலும் பௌத்த சிற்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. குறிப்பாக இருக்கின்ற, நிற்கின்ற நிலையி லான சிற்பங்களில் பெரும்பாலானவை யாழ்ப்பாணம் அரும்பொருட் காட்சிய கத்தில் வைக்கப்பட்டள்ளன. இச்சிற்பங்கள் யாழ்ப்பாணத்து மக்களிடையேயும் பௌத்த பாரம்பாரியம் ஒன்று தோன்றி வளர்ந்து பின் மறைந்துள்ளது எனக் கொள்ளவதற்கு ஆதாரமாகவுள்ளன.

### 1. நாகபாம்பு உருவத்துடன் கூடிய புத்தரின் பாதச்சுவடு

பேராசிரியர் பரணவிதான இலங்கையின் தொடக்ககாலப் பௌத்த கலைப் படைப்புக் கள் ஆந்திராவில் இருந்து கொண்டு வரப்பட்டதாகக் கூறுகின்றார். ஆந்திராவில் மகாயான பௌத்தம் எழுச்சியடைந்தபோது இதுவரை தூபிகளில் அமைக்கப்பட்ட புத்தரது ஞாபகச் சின்னங்களுக்குப் பதிலாக புத்தர், போதிசத்துவர் உருவங்களை மனித வடிவில் சிற்பங்களாக உருவாக்கும் முறை தோன்றியது. அத்துடன் பௌத்தமதக் கோட்பாடுகளையும், புத்தரது வாழ்க்கை யில் நடந்த பல்வேறு அற்புதங்களையும் வெளிப்படுத்தும் விதமாக மனித, தெய்வ உருவங்கள் படைக்கப்பட்டன. இவை சமகால இலங்கை கலைமரபிலும் செல்வாக் கினைச் செலுத்தியிருந்தன. இவற்றில் நாக, நாகினி, துவாரபாலகர் சிற்பங்கள் ஆந்திர, இலங்கை சிற்பக்கலை உறவிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும். தென்னாசியா வின் தொன்மையான வழிபாட்டு நெறியாகிய நாக வழிபாட்டு மரபு பிற்காலத்தில் இந்து, பௌத்த மதங்களுடன் இணைந்து கொண்டமைக்கு பௌத்த ஆலயங்களில் வரும் நாக, நாகினி உருவங்களுடன் பாம்பு உருவம் காணப்படுவதனைக் குறிப்பிடலாம்.

பௌத்த ஆலயங்களில் தனித்துவம். பல இடங்களில் மனித தெய்வ உருவங்களுடன் இணைந்தும், பௌத்த மதத்திற்கு சேவை செய்பவர்களாகவும், பௌத்த மதத்தைப் பூசிப்பவர்களாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன (புஸ்பரட்ணம், 1985 : 99 - 105). இவ்வாறான சிற்ப வடிவங்கள் அநுராதபுர பௌத்த ஆலயங்களில் பரவலாக காணப்பட்டாலும் கூட வட இலங்கையிலும் பௌத்தத்துடன் தொன்மையான நாக மரபு இணைந்து கொண்டமைக்கு மிகச் சிறந்த உதாரண மாக யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் புத்தரது பாதச் சுவட்டிற்கு மேலாக ஐந்து தலைகளினை உடைய நாகபாம்பு உருவம் புடைப்புச் சிற்ப வடிவில் காணப்படு வதனைக் குறிப்பிடலாம். இங்கு புத்தரது பாதச் சுவடானது குறியீட்டு வடிவில் காணப்படுகின்றது. புத்தரது உருவங்களை அமைத்து வழிபடும் உருவவழிபாட்டிற்கு முந்தியதாகவே புத்தரின் புனித பாதச் சுவட்டினை குறியீட்டு மரபில் வணங்கும் முறை காணப்பட்டிருந்தது. தமிழ்ப் பௌத்த காவியமான மணிமேகலையில் வரும் புத்த பீடிகையை கண்டு வணங்கிய செய்தியும் இப்பின்னணியிலானது. இச்சிற்ப வடிவம் வட இலங்கையின் மன்னார் திருக்கேதீஸ்வரப் பகுதியிலிருந்து 1946ஆம் ஆண்டு யாழ்ப்பாண நூதனசாலைக்குக் கிடைக்கப்பெற்றதாக நூதனசாலை தரவுகளிலிருந்து அறிய முடிகின்றது.

**2. கந்தரோடை : நிற்கும் நிலையிலான தலையற்ற புத்தர்சிலை**

கந்தரோடையில் கிடைக்கப்பெற்ற பௌத்த மதத்திற்குரிய மரபுரிமை எச்சங்க ளில் நிற்கும் நிலையிலான தலையற்ற புத்தர் சிலை குறிப்பிடத்தக்கதாகும். வெண் வைரக் கல்லினால் அமைந்த இப்புத்தர் சிற்பம் சுமார் ஐந்தரை அடி உயரமானதாக வும், மார்புப் பகுதியானது இரண்டடி ஒரு அங்குல அகலத்தினைக் கொண்டதாகும். இப்புத்தர் சிலை ஆந்திர அமராவதிக் கலைப்பாணியினைப் போன்று ஒட்டும் முறை பின்பற்றப்பட்டிருந்ததோடு கைகால் வெவ்வேறாகப் பொருத்தப்பட்டிருந்தது. இப்புத்தர் சிலையின் காலம் கி.பி 3ஆம் நூற்றாண்டு என அறியமுடிகிறது. மடிப்புக் குலையாத நிலையில் இதன் போர்வை இடதுபக்க மார்பை மூடிய நிலையில் செதுக்கப்பட்டுள்ளது. தற்போது இப்புத்தர் சிலையானது யாழ்ப்பாண அருங்காட்சிய கத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**3. சுன்னாகம் : நிற்கும் நிலையிலான புத்தர் சிலை**

சுன்னாகத்திற்கு அண்மையில் 1917இல் போல் பீரிஸினால் நிற்கும் நிலையிலான புத்தருடைய சிற்பம் அகழ்ந்தெடுக்கப் பட்டது. 12 அடி உயரத்தையும், 20 அங்குல மார்பக அகலமும் கொண்ட இச்சிற்பமே ஒரளவு முழுமையாக பாதுகாக்கப்பட்டிருந் ததாக அறியப்பட்டாலும் தற்போது இப் புத்தர் சிலை பற்றி எதுவும் அறியமுடிய வில்லை. தனி வெண்வைரக்கல்லினால் அமைக்கப்பட்ட இச்சிற்பம் அமராவதிக் கலைப்பாணியைக் கொண்டமைந்தாகும். இச்சிற்பத்தின் தலை அமைப்பானது காந்தாரக் கலை மரபின் சுருள் கேச அமைப்பிலானது. அதேவேளை மதுராக் கலையமைப்பில் காணப்படும் உச்சிக் கொண்டை முறையுடன் இணைத்து காணப்படுகின்றது (கிருஸ்ணராசா, 1998 :36). மேல் அங்கியின் அமைப்பு பாதத்தினை மறைப்பதாக பாதத்திலிருந்து மடிக்கப்பட்டு இடது பாதத்தினை மறைத்த நிலையில் இடது கையில் இருந்து கீழ் நோக்கித் தொங்குவ தாகச் செதுக்கப்பட்டுள்ளது.

**4. மாகியப்பிட்டி நிற்கும் நிலையிலான புத்தர் சிலை**

சுன்னாகத்தில் கந்தரோடைக்கு அண்மையில் மாகியப்பிட்டியில் 1919ஆம் ஆண்டு போல் பீரிஸினால் நிற்கும் நிலையிலான புத்தருடைய சிற்பம் ஒன்று கண்டு பிடிக்கப் பட்டது. கிட்டத்தட்ட ஆறு அடி உயரமுடைய தான இப்புத்தர் சிலையின் பகுதி மாகியப் பிட்டி மீனாட்சி அம்மன் கோவில் வளாகத்திலிருந்து அப்போதைய பூசகரின் அனுமதியுடன் அகழ்ந்தெடுக்கப்பட்டதாகவும், முழுமையாக இப்புத்தர் சிலை கிடைக்கப் பெற்றிருக் குமானால் அது நிற்கும் நிலையிலான எட்டரையடி உயரம் கொண்டதாகவும் காணப் பட்டிருக்கும் எனவும் போல் பீரிஸ் குறிப்பிட்டிருந்தார் (Pieris, 1919 : 41). மாகியப்பிட்டியில் கிடைக்கப் பெற்ற சுண்ணாம்புக் கல்லிலான இப்புத்தர் சிலையின் பகுதியானது தற்போது யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதனைவிட ஆந்திரத் தொடர்பால் அமராவதி கலை மரபினைப் பிரதிபலிக்கும் சுன்னாகத்தில் கிடைக்கப் பெற்ற புத்தரது சிற்பமொன்று தற்போது அநுராதபுர அருங்காட்சியகத்தில் வைக்கப் பட்டுள்ளது. (இந்திரபாலா,2006, 206).

**5. தலையில்லாத நிற்கும் நிலையிலான புத்தர் சிலை -கந்தரோடை**

கந்தரோடையில் கிடைத்த சுண்ணாம்புக் கல்லிலான நிற்கும் நிலையிலான புத்தர் சிலையானது 3அடி 3அங்குல உயரமுடைய தாகவும், அதன் மார்ப்புப் பகுதி ஒரு அடி நான்கு அங்குல அகலமுடையதாகவும் உள்ளது. இச்சிற்பமானது தலை அற்ற நிலையில் கை, கால்கள் அற்ற நிலையில் அல்லது வெளிப்படுத்தும் போது அவை உடைந்த நிலையிலும் காணப்படுகின்றது. ஆடை அலங்காரமானது இடது பக்க மார்பை மறைத்த நிலையில் இடது கையின் ஊடாக கீழ் நோக்கித் தொங்குவுதாக அமைந்துள்ளது. இச்சிற்பத்தின் கீழ்ப்பாகம் வெடிப்புக்கள் கொண்டதாகவும், சீமெந்தினால் உடைவு ஒன்று பொருத்தப்பட்ட நிலையிலுமே தற்போது யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட் டுள்ளது.

**6. புத்தரது தலைச் சிற்பங்கள் கந்தரோடை**

கந்தரோடையிலிருந்து கிடைக்கப் பெற்றதாக இரு புத்தரது தலைப்பாகங்கள் யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட் டுள்ளன. இதில் போதிசத்துவருடையதாக அடையாளங்காணப்பட்ட சுண்ணாம்புக் கல்லிலான தலைச் சிற்பமானது ஒரு அடி ஒன்பது அங்குல நீளமுடையதாகும். இரண்டாவது, முருகைக் கல்லால் செப்பனிடப் படாத வகையில் அமைக்கப்பட்ட ஒரு அடி உயரமுடையதான புத்தரது தலைச் சிற்பமா கும். இவை செப்பனிடப்படாத கரடுமுரடான தன்மை கொண்டவையாகும்.

**7. பீடத்துடன் கூடிய புத்தரது கால் பாகம் - மாகியப்பிட்டி**

சுண்ணாம்புக் கல்லிலான வட்ட வடிவமான உயரமான பீடமும், அதன் மேல் அமைக்கப் பட்ட கால் பாதத்தின் அளவினை யும் பார்க்கும் போது இச்சிற்பம் யாழ்ப்பாணத்தில் கிடைக்கப்பெற்ற மிக உயர்ந்த சிலையாகக் கருத முடியும். எனினும் இச்சிற்பத்தின் கொலுசுடன் கூடிய கால்பாகம் மட்டுமே மாகியப்பிட்டியிலிருந்து போல்.பீரிஸின் ஆய்வில் கிடைக்கப்பெற்று யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட் டுள்ளது. கொலுசுடன் கூடிய இக்கால் பாதமானது வீரக்கழலுடன் கூடிய அரசனின் பாதமாக அல்லது மைத்திரேய புத்தரின் கால்பாதமாக இருக்கலாம் எனக் கருதப்படு

கின்றது (Pieris, 1917 : 26). வட்ட வடிவான இந்த உயர்ந்த பீடமானது இச்சிலையை நிற்க வைப்பதற்காக நிலத்தில் புதைக்கும் பகுதியாகவே 2அடி 3அங்குல உயரமுடைய தாகவுள்ளதுடன், அதன் மேல் உள்ள பாதமானது ஒரு அடி உயரமுடையதாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கண்ணகி விழாவிற் கலந்து கொண்ட கஜபாகு மன்னன் அவ்விழா முடிந்ததும் வட பகுதி ஊடாக கண்ணகியின் காற்சிலம்போடு அநுராதபுரத்தை அடைந்ததாகவும், ஈழத்தில் கண்ணகி வழிபாட்டினை வளர்க்க விரும்பிய கஜபாகு மன்னன் கந்தரோடை யில் உள்ள அங்கணாமைக் கடவையில் கண்ணகிக்கு கோயிலொன்றை அமைத்த தாகவும் அறியமுடிகின்றது. இந்நிகழ்ச்சி யினை நினைவுபடுத்தும் முகமாக இவ்வால யத்திற்கு முன்பாக வைக்கப்பட்டிருந்த கஜபாகுவின் சிலை யானை ஒன்றினால் உடைக்கப்பட்டதனால், இச்சிலையின் காலுந் தலையும் 1917-19களில் போல் பீரிஸின் தொல்லியல் ஆய்வின் போது கண்டு பிடிக்கப்பட்டு யாழ்ப்பாண அருங்காட்சியகத் தில் வைக்கப்பட்டதாகவும் அறியமுடிகின்றது (Rasanayagam, 1926 : 73 – 74). இச் செய்தி யின் அடிப்படையில் இக்கால்பாதத்திற் குரிய சிற்பமானது கண்ணகி வழிபாட்டை இலங்கையில் பரப்பிய கஜபாகு மன்னனின் சிலையாகவும் கருத இடமுண்டு.

**8. புத்த சிற்பத்தின் மார்புப் பகுதி - கந்தரோடை**

யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் காணப்படும் சுண்ணாம்புக் கல்லிலான புத்த சிற்பத்தின் உடற் பாகமான மார்ப்புப் பகுதி மட்டும் 3அடி 3அங்குல அகலம் உடைய தாகும். கந்தரோடையிலிருந்து கிடைக்கப் பெற்ற இச்சிற்பத்தின் ஏனைய பாகங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. இடது பக்க மார்பினை மூடியதாக கோட்டுருவ வடிவில் போர்வையானது செதுக்கப்பட்டுள்ளது.

**9. உலோகத்திலான இருக்கும் நிலையி லான சிறிய புத்தர் சிலை - கந்தரோடை**

கந்தரோடையிலிருந்து கிடைக்கப்பெற்ற உலோகத்திலான இருக்கும் நிலையிலான புத்தரது சிற்பமானது 4சென்ரி மீற்றர் நீளத்தி னையும், 4.5சென்ரி மீற்றர் அகலத்தினையும் உடைய சிறிய சிலையாகும். தலையற்ற நிலையில் காணப்படும் இப்புத்தர் சிற்பத்தின் உடலமைப்பானது கந்தரோடை, நிலாவரை ஆகிய இடங்களில் கிடைத்த புத்தர் சிலைகளி னை ஒத்ததாகவுள்ளது. தியானத்தில் இருக்கும் நிலையிலான இச் சிற்பத்தின் ஆடையமைப்பானது மடிப்புக் குலையாத நிலையில் இதன் போர்வை இடதுபக்க மார்பை மூடியநிலையில் செதுக்கப்பட் டுள்ளது.

**10.வல்லிபுரம் நிற்கும் நிலையிலான புத்தர் சிலை**

தற்போதைய வல்லிபுரக் கோவிலுக்கு வடக்கே 50யார் தொலைவில் ஒருவகை பளிங்கு கல்லிலான நிற்கும் நிலையிலான புத்தர் சிலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இப்புத்தர் சிற்பத்தின் அமைப்பும், ஆடை மடிப்பில் காணப்படும் தெளிவான தன்மை யும் ஆந்திரக் கலைமரபின் செல்வாக்கைப் பிரதிபலிக்கின்றன. இப்புத்தர் சிலையின் வலது கரம் உடைந்த நிலையிலும், வலது மார்பும் தோளும் காவி உடையினால் மறைக்கப்பட்டுள்ள வகையிலும் காணப்படு கின்றன. ஆடையின் அமைப்பானது பாதத் தினை மறைத்த நிலையில் பாதத்திலிருந்து மடிக்கப்பட்டு மீண்டும் இடது கையிலிருந்து கீழ் நோக்கிச் செல்வதாகச் செதுக்கப்பட் டுள்ளது. இப்புத்தர் சிலையானது வல்லிபுரத் திலிருந்து யாழ்ப்பாணப் பழைய பூங்காவில்

உள்ள மரத்திற்கு கீழ் வைக்கப் பட்டிருந்ததாகவும், பின்னர் 1906ஆம் ஆண்டு ஆளுநாராக இருந்த சேர் ஹென்றி பிளேக் என்பவரால் தாய்லாந்து மன்னனுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டதாகவும் அறியமுடிகின்றது (இந்திரபாலா, 2006, 236).

### 11. புத்தூர் புத்தர் சிற்பம்

வல்லிபுர புத்தர் சிலையினை ஒத்த அமைப்புள்ள புத்தர் சிலையொன்று புத்தூரையும், சுன்னாகத்தையும் இணைக்கும் பிரதான வீதியின் மேற்குப் பகுதியில் நிலாவரை என்ற இடத்திற்கு அண்மையில் உள்ள தோட்டத்தில் 1954ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது. ஒருவகைச் சுண்ணாம்புக் கல்லினால் 3 அடி 5 அங்குல உயரமுடைய தாகவும், மார்ப்புப் பகுதியானது 2அடி அகலம் கொண்டதாகவும் அமைக்கப்பட்ட இப்புத்தர் சிலையின் தலையானது 1 அடி 2 அங்குல உயரத்தைக் கொண்டதாகும். இப்புத்தர் சிலையின் பாகங்கள் உடைந்த நிலையிலேயே கிடைக்கப்பெற்றுள்ளன. இச் சிற்பத்தின் பாதங்கள் உடைந்த நிலையில் உள்ளன. அவை அகழ்ந்தெடுக்கப்பட்ட போது உடைந்திருக்கலாம் அல்லது பாதங்கள் பொருத்தப்படாமல் இருந்திருக்கலாம். தற்போது (2019ம் ஆண்டு) இச் சிற்பமானது உடைந்த தலைப்பாகம் பொருத்தப்பட்டு யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

### 12. சந்திர வட்டக்கல்

பௌத்த கலைமரபு மற்றும் தத்துவார்த்த ரீதியில் முக்கியம் பெறும் சிற்ப வடிவங்களில் சந்திரவட்டக்கற்களும் ஒன்றாகும். சந்திரவட்டக்கல் என்பது பௌத்தமத வழிபாட்டுடன் தொடர்புடைய விகாரைகள், ஸ்தூபிகள் அல்லது சிலையகங்கள் போன்ற கட்டிடங்களில் பிரதான வாசலின் படிக்கட்டுக்கு முன்பு அரைவட்ட வடிவில் அமைக்கப்படும் சிற்பக் கலைவடிவமாகும். இலங்கையில் காலத்தால் முற்பட்ட சந்திர வட்டக்கல் கண்டுபிடிக்கப்பட்ட இடங்களில் கந்தரோடையும் ஒன்றாகும் (புஸ்பரட்ணம், 1985:112). இவை காலத்தல் முற்பட்டவையாக கி.மு 1ஆம், 2ஆம் நூற்றாண்டுக்குரியதாக மிகிந்தலை, அபயகிரிவிகாரை ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றன. தொடக்க கால சந்திர வட்டக்கற்கள் ஆந்திர கலைத் தொடர்பைப் புலப்படுத்துவனாக அலங்கார வேலைப்பாடுகள் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. அமராவதி, நாகர்சுன கொண்டா போன்ற இடங்களில் உள்ள சந்திரவட்டக் கற்கள் மூன்று கற்களை இணைப்பதன் மூலம் ஆக்கப்பட்டவை. அவற்றில் ஒரு அரைவட்டக் கல்லில்தான் சிற்ப வேலைப்பாடுகள் காணப்படும். இத்தகைய அம்சங்களினை கந்தரோடை, அநுராதபுரத்திலுள்ள அபயகிரி விகாரை ஆகிய இடங்களில் காணப்படும் சந்திர வட்டக்கற்களில் காணலாம். குறிப்பாக கந்தரோடை அகழ்வாய்வில் வெளிக் கொணரப்பட்ட சந்திர வட்டக்கல், வேலைப்பாடுகள் எதுவும் அற்ற நிலையில் மூன்று வெவ்வேறான கற்களை இணைத்தவகையில் ஒரு அரைவட்டக்கல்லில் மட்டும் சிறிய கோடுகள் கொண்டதாக அமைந்திருந்தது.

### 13. பருத்தித்துறை புலோலியில் கிடைக்கப்பெற்ற புத்தரது தலைச்சிற்பம்

யாழ்ப்பாணத்தில் கிடைக்கப்பெற்ற பெரும்பாலான பௌத்த சிற்பங்கள் இங்கு கிடைக்கப்பெற்ற வெண்வைர சுண்ணாம்புக் கற்களினாலும், முருகைக் கற்களினாலும் ஆக்கப்பட்டவையாக அமைந்திருக்க புலோலியில் கிடைக்கப்பெற்ற இப்புத்த சிற்பத்தின் தலைப்பாகம் கருங்கல்லினால் ஆக்கப்பட்டதாகும். 15 சென்ரிமீற்றர் உயரத்தி

னையும், 45 சென்ரிமீற்றர் சுற்றளவையும் உடைய இச்சிற்ப பாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதனுடைய கலை அமைப்பினைப் பற்றி நோக்கும் போது வட்ட சுருள் கேசத்தின் உச்சியில் இடைவந்திக் கட்டுடனான கேசபந்தம் ஒன்று வடிவமைக் கப்பட்டுள்ளது. நீண்டு ஒடுங்கித் தொங்கும், இருபக்கக் காதுகளிற்கும் முத்தாய்ப்பாக ஒரு சிகரம் வைத்தாற் போல் இப்புத்தர் படிமத்தின் உச்சிக்குடுமி நாகபட்டினப் பௌத்தக் கலை மரபினை மிகத் துல்லிய மாக எடுத்தியம்பி நிற்கின்றது.

**14. புத்தரது பாதச்சுவடு செதுக்கப்பட்ட பீடம்**

புத்த சிற்ப வடிவங்களுக்கு முற்பட்டதான குறியீட்டு மரபிலான 'சிறிபதுல்' என அழைக்கப்படும் புத்தரின் பாதச்சுவட்டு வணக்க முறையானது தொன்மையா னதாகும். சுண்ணாம்புக் கல்லினால் 37 சென்ரி மீற்றர் நீளம், 43 சென்ரி மீற்றர் அகலம், 18 சென்ரி மீற்றர் உயரம் கொண்ட சதுரமான பீடத்தில் புத்தரது புனித பாதச் சுவடு செதுக்கப்பட்டுள்ளது. சிறிபாதக்கல் எனவும் இப்பாதச்சுவடு அழைக்கப்படுவ துண்டு. யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் உள்ள இச்சிறிபாதக்கல் கந்தரோடையிலி ருந்து கிடைக்கப் பெற்றதாகும்.

**15. வல்லிபுரம்**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கந்தரோடை யினை அடுத்துத் தொன்மையான பௌத்த மதம் சிறப்புற்ற இடங்களில் வல்லிபுரம் குறிப்பிடத்தக்கதாகும். கந்தரோடையினைப் போன்று வல்லிபுரமும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் தொன்மையான நாகரிக உரு வாக்க மையங்களில் ஒன்றாகும் என்பதனை இப்பிரதேசத்திலும், அதன் அண்மையிலும் கிடைக்கப்பெற்ற தொல்பொருட்சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இலங்கையில் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட ஒரேயொரு பொற்சாசனமானது வல்லிபுரப் பிரதேசத்தி லேயே 1936ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப் பட்டது. கி.பி 4ஆம் நூற்றாண்டுக்குரியதான இப் பொற்சாசனமானது இங்கு அமைக்கப் பட்ட பௌத்த ஆலயம் பற்றிக் குறிப்பிடு கின்றது. இவ்வல்லிபுர பொற்சாசனமானது மூன்றரையடி நீளமும், ஒரு அங்குல அகலமுடையதாகவும், பிராமி எழுத்தில் நான்கு வரிகளினைக் கொண்டதுமாகும். இப்பொற்சாசன மொழிபெயர்ப்பு மற்றும் அதன் பொருள் மற்றும் காலம் குறித்து வரலாற்று அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்து நிலைகள் இருப்பதும் சுட்டிக்காட்டத் தக்கதாகும். இங்கு கண்டு எடுக்கப்பட்ட புத்தர் சிலையினைப் போன்று இதன் எழுத்து வடிவமானது ஆந்திர பிரதேசத்தில் வழக்கி லிருந்த பிராமி வரிவடிவத்தை ஒத்ததாகும் எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. இலங்கையின் அரசியல் வரலாறு தொடர் பாக முக்கியம் பெறும் இச்சாசனமானது 1991 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக ஜனாதிபதியி டம் கையளிக்கப்பட்டது. ஜனாதிபதிச் செயலகத்தில் இடம்பெற்ற வைபவத்தின் போது அப்போதைய இலங்கையின் ஜனாதிபதி அதிமேதகு ரணசிங்க பிரேமதாச அவர்கள் தனது உரையில் 'இலங்கை அரசாங்கத்தின் சார்பிலும், இலங்கைவாழ் மக்கள் சார்பிலும் இச்சாசனத்தை ஏற்றுக் கொண்டு அதனை அரச அருங்காட்சியகத் தில் வைத்துப் பாதுகாப்பதற்கும், பொது மக்கள் பார்வைக்கு வைப்பதற்கும் தகுந்த ஏற்பாடுகளை செய்வதாகவும்' குறிப்பிட்டி ருந்தார் (மாலினி டயஸ், 1992 : 2). எனினும் வரலாற்று, அரசியல் முக்கியத் துவம் பெற்ற இவ்வல்லிபுர பொற்சாசனமானது தற்போது எங்கிருக்கின்றதென அறியமுடியவில்லை.

யாழ்குடாநாட்டில் காணப்படும் பௌத்த மையங்களில் வல்லிபுரமும் குறிப்பிடத்தக்க மையமாகும். இங்கிருந்து பெறப்பட்ட புத்தரது சிற்பமும், பொற்தகட்டுச்சாசனமும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். வல்லிபுரம் விஷ்ணு கோவிலுக்கு அருகாமையில் கண்டெடுக்கப்பட்ட நிற்கும் நிலையிலான புத்தர் சிலையானது ஆந்திரக் கலைமரபிலானது. தற்போது இச்சிலை தாய்லாந்து, பாங்கொக் நகரில் உள்ளது. வல்லிபுர பொற்சாசனம் பற்றி அறிஞர்களிடையே வேறுபட்ட கருத்துக்கள் நிலவுவதனை அவதானிக்க முடிகின்றது. எனினும் இங்கு கிடைக்கப் பெற்றிருக்கும் புத்தரது உருவச் சிலையானது ஆந்திர கலைமரபிலானது என்பதில் ஒத்த கருத்து நிலையே காணப்படுவதால் இச்சாசனத்திலும் ஆந்திர செல்வாக்கு காணப்பட்டிருக்கும் என்பது மறுக்க முடியாதாகும். மேலும் வல்லிபுர சாசனத்தினூடாகப் பொதுவாக நாகதீபத்தில் அமைக்கப்பட்ட விகாரை பற்றிய செய்தியினை அறிந்து கொள்ள முடிகின்றது. இதனூடாக யாழ் குடா நாட்டில் பௌத்த மதம் பெற்ற செல்வாக்கினை அறிந்து கொள்ளமுடியும்.

**16. மட்பாண்டச் சாசனம்**

கந்தரோடையில் கிடைக்கப்பெற்ற மட்பாண்டச் சாசனம் ஒன்று ‘ததஹபத’ என பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்டதாக கிடைக்கப்பெற்றுள்ளது. ‘ததஹபத’ என்பது தத்தன் என்ற பௌத்த துறவியின் பாத்திரம் (படம்16.1) எனப் பொருள் கொள்ளப்படுகின்றது (இந்திரபாலா, 2006 : 332). இம் மட்பாண்டச் சாசனமானது கி.மு 2 ஆம் நூற்றாண்டுக்குரியதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் ‘குணி’ என தமிழ்ப் பிராமி எழுத்துச் சாசனம் (படம்16.2) செ. கிருஸ்ணராஜாவினால் கந்தரோடையில் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது (கிருஸ்ணராஜா, 1998 : 50). இச்சாசனம் மட்பாண்ட துண்டொன்றில் காணப்பட்ட நிலையில் குணி என்பது பிக்குணி என்ற சொல்லின் பின்னொட்டுச் சொல்லாகவே அமையும் என அவர் கருதுகிறார்.

**17. கல்வெட்டு : கந்தரோடை**

கந்தரோடையில் கிடைக்கப்பெற்ற சிங்களக் கல்வெட்டொன்று யாழ்ப்பாண அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்வெட்டானது 2 அடி 7அங்குல உயரமுடையதாகவும், 9 அங்குல அகலம் கொண்ட தூண்கல் வெட்டாக இருப்பதுடன் அதன் மூன்று பக்கமும் எழுத்துப் பொறிக்கப் பட்டுள்ளது. தூண்கல்வெட்டின் மேற்பகுதியில் பூரண கும்பமும், அதன் ஒரு பக்கத்தில் சூரியனது உருவமும் செதுக்கப்பட்டுள்ளன. மத்திய கால சிங்கள எழுத்தில் எழுதப்பட்ட இக்கல்வெட்டு நான்காம் தப்புல (கி.பி 923 - 935) மன்னன் காலத்துக்குரியதாகும். இக்கல்வெட்டில் அரச அதிகாரிகள் அரச கடமைகளின் பேரில் அபயகிரி விகாரை வளவுக்குள் நுழையக்கூடாது என வெளியிடப் பட்டுள்ள அரச கட்டளை குறிப்பிடப்பட்டுள்ளது (Inscription of Ceylon, Volume V, Part II). கந்தரோடையில் கிடைக்கப்பெற்ற இத்தூண்கல் வெட்டில் அநுராதபுரத்தில் அமைந்துள்ள அபயகிரி விகாரை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை ஆய்வுக்குரிய விடயமாகும். மேலும் இலங்கையில் கிடைத்த தமிழ்க் கல்வெட்டுக்களில் மிகத் தொன்மைவாய்ந்த தமிழ் கல்வெட்டொன்று அநுராதபுரத்தில் அபயகிரி விகாரை வளாகத்துக்குள் கண்டு பிடிக்கப்பட்டிருந்தது. இந்த அபயகிரிவிகாரைக் கல்வெட்டு கி.பி 8 ஆம் நூற்றாண்டுக்குரியதாய் விளங்குவதோடு அபயகிரி விகாரையுடன் தமிழர்களுக்கிருந்த தொடர்பை பறைசாற்றுகின்றதெனலாம். மகாயான பௌத்தம் சார்பான அநுராதபுரகால பெரும் விகாரைகள் தென்னிந்தியத் தொடர்பினைக் கொண்டிருந்

ததன் அடிப்படையில் அபயகிரி விகாரையின் தோற்றமும், வளர்ச்சியும் தென்னிந்திய பௌத்தர்களின் செல்வாக்கின் காரணமாக ஏற்பட்டவையாகும் (பத்மநாதன், 2006 : 39-40). அபயகிரி விகாரையைச் சேர்ந்த பௌத்தர்கள் அநுராதபுரத்தில் வசித்திருந்ததுடன், இத்திருப்பணி செய்தவர்கள் அல்லது அவற்றில் பங்கு கொண்ட சிற்பிகள் பௌத்தர்களாக விளங்கியிருத்தல் வேண்டும் என்பதனை அபயகிரி விகாரைக் கல்வெட்டுப் புலப்படுத்தி நிற்கின்றது. இவ்வாறாக அநுராதபுரத்து அபயகிரி விகாரைக் கல்வெட்டு மற்றும் கந்தரோடை அபயகிரி வளாகத்து செய்தி பற்றிய இரு கல்வெட்டுக்களும் மொழி அடிப்படையில் வேறுபட்ட தமிழ், சிங்கள மக்கள் கிட்டத்தட்ட கி.பி 10 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் பௌத்த சமயத்தினை பின்பற்றியதற்கும் அதிலும் குறிப்பாக அபயகிரி விகாரையைச் சேர்ந்தவர்களாக இருந்ததற்கும் மிகச் சிறந்த உதாணங்களாக உள்ளன.

## 18. கார்ணிலியன் கல்லில் அமைந்த சாசனம்

கந்தரோடையில் கிடைக்கப்பெற்ற சிவப்பு நிற கார்ணிலியன் (red carnelian) எனப்படும் மணிவகையைச் சேர்ந்த (Semi precious Stone) சாசனத்தில் ‘விஷ்ணு பூதிஸ்ய’ என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 1.02 சென்ரிமீற்றரும், அகலம் ஒரு சென்ரி மீற்றருமாகும். இலங்கையில் கிடைக்கப்பெற்ற ஒரேயொரு எழுத்துப்பொறித்த சாசனமாக கருதப்படும் இச்சாசனம் கி.பி 3 ஆம் அல்லது 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும் (இந்திபராலா, 2006, 330). இந்துக்களும் பௌத்த மதத்திற்கு தானம் வழங்கியிருந்தமைக்கு இச்சாசனம் சான்றாதாரமாக கொள்ளலாம். இதனடிப்படையில் விஷ்ணு பூதிஸ்ய என்பவன் கந்தரோடையிலிருந்த பௌத்த சமய நிறுவனத்திற்கு தானம் அளித்ததாகக் கொள்ளமுடியும்.

## தொகுப்புரை

யாழ்ப்பாணக் குடாநாட்டின் புராதன, இடைக்கால வரலாற்றில் நிலவிய பௌத்த மதம் பற்றிய வரலாற்று உண்மைகளினை விடுத்து காலத்துக்குக் காலம் இங்கு கிடைக்கப்பெற்ற பௌத்தமத தொல்லியல் மரபுரிமைகளினை ஒர் இனச் சார்பாகப் பார்க்கின்ற மரபு காணப்படுகின்றது. இதன் காரணமாக அரசியல் மாற்றங்களின் அடிப்படையில் ஒருகால கட்டத்தில் இம் மதம் தொடர்பான மரபுரிமைகள் சிதைவடைந்திருந்ததுடன், இன்னொரு கால கட்டத்தில் இம் மரபுரிமைகள் ஏனைய தொல்லியல் மரபுரிமைகளினைவிட முக்கியப்படுத்தி பாதுகாக்கவும் படுகின்றன. இவ்வாறான போக்கிற்கு யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய பௌத்த மதம் பற்றிய வரலாற்றுத் தெளிவின்மையே முக்கிய காரணமாகும். ஆகவே இலங்கைக்குப் பௌத்தம் வட இந்தியாவிலிருந்து உத்தியோக பூர்வமாக அறிமுகப்படுத்தப் பட்டாலும் அது தொடர்ந்து வளர்வதற்கு ஆந்திராவும், தமிழகமும் முக்கிய காரணமாக அமைந்தன. யாழ்ப்பாணத்தின் பௌத்த மத தொல்லியல் மரபுரிமைகள் பெரிதும் ஆந்திர, தமிழகக் கலைமரபினையே புலப்படுத்தி நிற்கின்றன. மேலும் வட இலங்கையில் நிலவிய பௌத்தம் தொடர்பாக இன்னொரு நிலைப்பாடும் உண்டு. அதாவது தென்னாசியா, தென்கிழக்காசியா, கிழக்காசியா முதலான நாடுகளில் பௌத்த மதம் பரவுவதற்கு வணிகத் தொடர்புகளே முக்கிய காரணமாக இருந்ததைப் போன்று தமிழகத்தின் கிழக்கு

கடற்கரையோரப் பகுதிகளைப் போல் வட இலங்கையின் மேற்கு கடற்கரைப் பகுதியிலும் பௌத்த வழிபாட்டு ஆலயங்கள் தோன்றியிருக்க வாணிபத் தொடர்புகளும் இன்னொரு காரணமாக அமைந்திருக்க வேண்டும் என்பதனை யாழ்ப்பாணத்தில் வல்லிபுரம், கந்தரோடை, நெடுந்தீவு போன்ற இடங்களில் கிடைத்த பௌத்தமத சின்னங்கள் உறுதிப்படுத்துகின்றன. பௌத்தமதம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் ஆசியாவின் முக்கிய மதமாக எழுச்சி பெற்றபோது அதன் செல்வாக்கு தமிழகத்திலும் இலங்கையிலும் பிரதிபலித்திருந்தது. ஆதிகால இடைக்கால இலங்கை வரலாற்றில் பௌத்த மதம் ஓர் இனத்துக்குரிய மதமாக அல்லாது அனைவரிடையேயும் செல்வாக்குச் செலுத்தியிருந்தது. இதனை பௌத்த, சமண துறவிகளுக்குத் தானம் கொடுப்பதை நோக்காகக் கொண்டு படைக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்கள் மேலும் உறுதிப்படுத்துகின்றன. பாளி, தமிழ், சிங்கள இலக்கியங்கள் கல்வெட்டுக்கள் மற்றும் பௌத்தம் மதம் தொடர்பான கட்டிட, சிற்பக்கலை எச்சங்கள் குறிப்பாக வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட பௌத்தமத எச்சங்கள் போன்ற சான்றாதாரங்களினை ஒன்றுசேர நோக்கும் போது ஆதிகால இடைக்கால இலங்கை வரலாற்றில் தமிழர்களின் மூதாதையினரின் ஒரு பிரிவினரும் பௌத்த மதத்தைப் பின்பற்றியுள்ளார்கள் என்பது வரலாற்று உண்மையாக அமைவதுடன் அம்மதம் காலப்போக்கில் தமிழர் வாழ்வியலிருந்து விலகிய தன்மையினையும் கண்டுகொள்ள முடிகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு பல்லினப் பண்பாட்டு பிரதேசம் என்பதனை இப் பௌத்த மதத்துக்குரிய தொல்லியல் மரபுரிமைகள் எடுத்துக்காட்டுகின்றன. தொல்லியல் சுற்றுலா அந்தந்த நாடுகளுக்கிடையே மதம், மொழி, பண்பாட்டு, இனம் சார்ந்த அம்சங்களை முதன்மைப்படுத்துவதாக உள்ளது. இத்தகைய தொல்லியல் சின்னங்களை வேறுபட்ட இனம், மதம், மொழி சார்ந்த மக்கள் பார்ப்பதன் மூலமும் அல்லது அவற்றைப் புரிந்து கொள்வதன் ஊடாகவும் அம்மக்களிடையே நல்லிணக்கமும், புரிந்துணர்வும் ஏற்பட வழியேற்படுத்தப்படுகின்றது. யாழ் குடாநாட்டின் பௌத்த மத தொல்லியல் எச்சங்களைப் பாதுகாத்து அவற்றிற்குச் சரியான விளக்கமளித்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திக் காட்சிப்படுத்துவதன் மூலம் சுற்றுலாத் துறையின் அதியுன்னத வளர்ச்சிக்கு வழிசமைப்பதுடன் இதனூடாக இப்பிரதேசத்தின் எதிர்கால பொருளாதார மேம்பாட்டிற்குப் பங்களிப்பு நல்க முடியும்.

## உசாத்துணைகள்


Begley, V. (1973). *'Proto – historical material from Sri Lanka (Ceylon) and Indian contacts' Ecological Backgrounds of South Asian Pre – history'*. (ed.) Kennedy, K.A.R & Possehl, G.L. New Orieans: 191 – 196.

Coningham, R.A.E & Lewer, N. (2000). The Vijayan colonization and the archaeology of Identity in Sri Lanka. *Antiquity.* Vol. 74: 707 – 712.

Geiger,W. (ed.). (1950). *Mahavamsa.* Colombo: Ceylon Government Information Department.

Geiger, W. (ed.). (1953). *Cūḷavaṃsa*. Ceylon Government Information Department: Colombo.

Karunaratne, S.M. (1984). 'Lithic and other Iscriptions of Ceylon' *Epigraphia Zeylanica.* Vol.6, Part I. Colombo: Archaeological Department of Ceylon.

Paranavitana, S. (1970). *Inscriptions of Ceylon, Early Brahmi Inscriptions Volume I.* Sri Lanka: Department of Archaeology.

Pieris, P.E. (1917). 'Nagadipa and Buddhist Remains in Jaffna – Part I'. *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society,* Vol. XXVI (70). Sri Lanka: Royal Asiatic Society: 40 -67.

Pieris, P.E. (1919). 'Nagadipa and Buddhist Remains in Jaffna – Part II'. *Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society,* Vol. XXVIII (72). Sri Lanka: Royal Asiatic Society.

Pushparadnam, P. (2011). 'Jaffna – Historical and Archaeological Perspective', *Work-shop on Conservation and Management of Heritage Sites in Jaffna.* Colombo: Ministry of National Heritage: 6 – 23.

Ragupathy, p. (1987). *Early Settlements in Jaffna.* Madras: Sundarsan Graphics.

Rasanayagam, C. (1926). *Ancient Jaffna.* Madras: Everyman's publishers

Thiagarajah, S. (2016). *Kantarodai Civilization of Ancient Jaffna 500 BCE–800 CE–a study in archaeological and other disciplines.* Colombo – Chennai: Kumaran book house.

இந்திரபாலா, கா. (2006). *இலங்கையில் தமிழர் - ஒர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு.* இலங்கை: குமரன் புத்தக இல்லம்.

கிருஸ்ணராசா, செ. (1998). *தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்.* யாழ்ப்பாணம்: பிறைநிலா வெளியீடு.

பத்மநாதன், சி. (2006). *இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்.* கொழும்பு: இந்து சமய கலாசார திணைக்களம்.

புஸ்பரட்ணம், ப. (1985). 'பௌத்த சிற்பங்கள் ஊடாக அறியப்படும் இலங்கை- ஆந்திர உறவுகள்'. *சிந்தனை.* தொகுதி 3 (2-3). கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

புஸ்பரட்ணம், ப. (2001). *இலங்கைத் தமிழரின் பண்டையகால நாணயங்கள்.* யாழ்ப்பாணம்: பவானி பதிப்பகம்.

புஸ்பரட்ணம், ப. (2002). *தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டைய கால மதமும் கலையும்,* கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

புஸ்பரட்ணம், ப. (2017). *இலங்கையில் தமிழர் ஒரு சுருக்க வரலாறு.* இலங்கை: தமிழ்க் கல்விச் சேவை சுவிற்சர்லாந்து.


மாலினி, டயஸ். (பதிப்பு). (1992). *வல்லிபுரம் தங்கத்தகட்டுச் சாசனம்.* கொழும்பு: இலங்கை தொல்பொருள் திணைக் களம்.

சிற்றம்பலம், சி.க. (1993). *யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு.* திருநெல்வேலி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு.

சயிதரன், சி. (2016). *தமிழர்களும் பௌத்த மதமும்.* யாழ்- மட்டுவில் கமலாசனி வித்தியாலய நிறுவுநர் வித்துவான் க.இராமலிங்கம் அவர்களின் நினைவுப் பேருரை.

சண்முகலிங்கம்,க. (2019). *இலங்கையில் பௌத்தமும் தேசியவாதமும் - கணநாத் ஒபயசேகரவின் ஆய்வுகள் குறித்து ஓர் அறிமுகம்.* யாழ்ப்பாணம்: சமூகவெளி படிப்பு வட்டம்.

கந்தரோடை



நாளாந்தா

குண்டுப்பள்ளி

நெடுந்தீவு



நெடுந்தீவு பௌத்த தூபியில் உள்ள கல்வெட்டுக்கள் புஸ்பரட்ணம்.ப.2017



1. சங்கமித்தா நினைவு மரம்

2. சங்கமித்தா நினைவுச் சின்னம்

நாகபாம்பு உருவத்துடன் கூடிய புத்தரின் பாதச்சுவடு



கந்தரோடை , கல்லாகம் நிற்கும் புத்தர் சிலைகள்



படம் -2

படம் -3 லெய் பிரிஸ் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது

படம் -5

மாகியப்பிட்டி - புத்தர் சிற்ப பாகம்




படம் 1 லெய் பிரிஸ் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது

படம் 1 தற்போது யாழ்ப்பாண அருங்காட்சியகத்தி லுள்ளது




படம் -14



படம் -13





இல. 1 ... வல்லிபுரம் பொன் ஏடு
1st C. AC - Vallipuram Gold Plate




படம் 16.1

படம் -15

படம் 16.2

1990


கந்தரோடை பௌத்த மத எச்சங்கள்



படம் -6.1

படம் -6.2

படம் -9



படம் -10
சிற்றம்பலம்.சி.க.1993

படம் -11

கந்தரோடையின் பௌத்தமத எச்சங்கள்



போல் பிரிஸ் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது

படம் -8



படம் -18

படம் -7